
Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 36 இதழ் - 8 ஆகஸ்ட் - 2023

தனிப்பிரதி
ரூ.10/-



CHURCH OF CHRIST
PROCLAIM THE GOSPEL
KANGAYAM - 638 701. INDIA

ஜெபியுங்கள் !! திட்டமிடுங்கள் !! பங்கு பெறுங்கள் !!

காங்கயம் கிறிஸ்துவின் சபையாரும்,
தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டமும்
இணைந்து நடத்தும்

# இருபத்தாறாம் வேதாகம கருத்தரங்கம்

# 26th Annual Bible Lectureship

கருப்பொருள் : சவாலான காலகட்டத்தில் தைரியமாயிருத்தல்

THEME : Being Courageous in Challenging Times

நாள் : அக்டோபர் 23,24 - 2023 ( திங்கள், செவ்வாய்)
(அரசு விடுமுறை நாட்கள்)

நேரம்

திங்கள் : காலை 8:45 - மாலை 4:45 மணி
செவ்வாய் : காலை 8:45 - மதியம் 1:00 மணி

இடம்

கிறிஸ்துவின் சபை வளாகம்
தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701. தமிழ்நாடு.

- வெளியூர்களிலிருந்து வருபவர்களுக்கு உணவும், தங்குமிடமும் இலவசம்.
- தங்குவதற்கு ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனி இடம் உண்டு.

தொடர்புக்கு : 04257 - 230030 செல் : 98427 - 30382, 99655 - 30385, 98652 - 90572.


## ஆசானின் அறிவுரையிலே ...


| | |
|---|---|
| 1. ஆசிரியர் உரை | 3 |
| 2. ஆராதனை வகைகள் | 11 |
| 3. பெண்கள் பகுதி | 15 |
| 4. வாலிபர் பகுதி | 18 |
| 5. சிறுவர் பகுதி | 21 |
| 6. நித்திய சுதந்தரம் | 22 |
| 7. தேவன் அருளிய சொல்லி... | 27 |
| 8. அவன் மேல் என் ஆத்துமா... | 30 |


- ஒன்றுக்கும் மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.
- முகவரி மாற்றத்தைக் கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
- இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.
- அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை / அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தை தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்.

THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 36 Aug - 2023 Issue - 8

ஆசிரியர் உரை

# மேரோசின் பாவம்

ஆமோஸ் பற்றி ஓரளவு எங்களுக்குத் தெரியும். போவாஸ் பற்றியும் கொஞ்சம் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால், யார் இந்த மேரோஸ் என்று அப்படியே யோசிக்கிறீர்களா? யோசியுங்கள். கண்டிப்பாக நீங்கள் நினைப்பது போல, இந்த மேரோஸ் ஒரு பழைய ஏற்பாட்டுப் பாத்திரமல்ல. அப்படியானால், புதிய ஏற்பாட்டில் இப்படியொரு பெயரை நீங்கள் காட்ட முடியுமா என்று சவால் விடுகிறீர்களா? கொஞ்சம் பொறுங்கள். முதலாவது, மேரோஸ் என்பது ஒரு நபரின் பெயரே அல்ல. குழப்பம் இன்னும் அதிகமாகிறதா? என்ன செய்வது, நமது வேத அறிவு அப்படியிருக்கிறது! உங்கள் குழப்பம் தீர்ந்து, நீங்கள் தெளிவடைய இந்த மேரோஸ் விஷயத்தில் வாய்ப்பு கொஞ்சம் குறைவாக இருப்பதால், நானே சொல்லிவிடுகிறேன்.

மேரோஸ் என்பது இஸ்ரவேலிலே இருந்த ஓர் இடம் அல்லது ஊரின் பெயர். இந்த ஊர் அமைந்திருந்த இடம் ஓர் ஆற்றங்கரை. இது இஸ்ரவேலின் கோத்திரத்துக்குட்பட்ட பகுதியில் இருந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. இந்த ஊரின் பெயர் ஒட்டுமொத்த வேதாகமத்திலும் ஒரே ஒரு இடத்தில் மட்டும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த ஓர் இடத்திலும் மெச்சும்படியான அளவில் சொல்லப்படவில்லை. இதோ அந்த வசனம், *மேரோசைச் சபியுங்கள், அதின் குடிகளைச் சபிக்கவே சபியுங்கள் என்று கர்த்தருடைய தூதனானவர் சொல்லுகிறார். அவர்கள் கர்த்தர் பட்சத்தில் துணை நிற்க வரவில்லை. பராக்கிரமசாலிகளுக்கு விரோதமாய் அவர்கள் கர்த்தர் பட்சத்தில் துணை நிற்க வரவில்லையே' (நியாயாதி.5:23)* அவர்கள் கர்த்தர் பட்சத்தில் துணை நிற்க வரவில்லை என்ற பரிசுத்த ஆவியானவரின் குற்றச்சாட்டு, ஒரே வசனத்தில் இரண்டு

முறை வெளிப்படுத்தப்பட்டிருப்பதால் மேரோசின் குடிகள், கர்த்தரின் பட்சத்தில் நிற்கும் வாய்ப்பு வந்தபோது, அதை உதாசீனம் செய்து, கர்த்தர் எரிச்சலடையும் ஒரு முடிவை எடுத்திருக்கிறார்கள் என்பது நன்றாகவே தெரிகிறது. அவர்களின் அந்த பாவச் செயலுக்குத் தண்டனையாகத் தான் மேற்கண்ட வசனம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால், அவர்களின் பாவச் செயல்கள் என்னவென்று வேதாகமம் விபரமாகச் சொல்லாதபடியால், அவைகளை நாம் கண்டுபிடிப்பதற்கு, அந்த வசனத்தின் பின்னணியைத் தெரிந்து கொள்வது அவசியமாகிறது. ஆகவே, அத்திசையில் நமது கவனத்தை இப்பொழுது செலுத்துவோம்.

இஸ்ரவேலை கானான் தேசத்துக்குள் வெற்றியாக அழைத்துச் சென்ற மாபெரும் தலைவனாகிய யோசுவாவுக்குப் பின் ஜனங்களை வழிநடத்த சரியான தலைமை இல்லை. அவனவன் தன்தன் பார்வைக்குச் சரியானபடி செய்து வந்தான். இந்த இழிநிலை, முதல் ராஜாவாகிய சவுல் ஏற்படுத்தப்படும் வரை நீடித்தது. சுமார் 300 முதல் 350 ஆண்டுகளை உள்ளடக்கிய இக்கால கட்டத்தில் தேவன் இஸ்ரவேலை நியாயாதிபதிகளைக் கொண்டு வழிநடத்தினார். வேதாகம சரித்திர ஆசிரியர்கள் இக்காலகட்டத்தை **இருண்டகாலம்** என்றும் குறிப்பிடுவதுண்டு. ஏனெனில், இந்த நாட்களில் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து, பாகால்களைச் சேவித்து, கர்த்தருக்கு கோபமூட்டி, கர்த்தரை விட்டு விலகிப்போனார்கள். [நியா.2:11-13] ஆகவே, தேவனும் அவர்களை விட்டு விலகினார்.

எப்பொழுதெல்லாம், கர்த்தர் இவர்களை விட்டு விலகினாரோ அப்பொழுதெல்லாம் சுற்றியிருந்த எதிரிகள் - இவர்களை மேற்கொள்ளுவார்கள். அவர்களின் கோரப்பிடியில் சிக்கிச் சீரழிந்து, விடுபடும் வழி தெரியாமல் திணரும்போது கொஞ்சம் புத்தி வரும். அப்பொழுது, **ஆ, எங்கள் கர்த்தாவே** என்று முறையிடுவார்கள். பரலோகத்தின் தேவனும், முற்பிதாக்களுக்குக் கொடுத்த வாக்கினிமித்தமாக இவர்களுக்கு இரங்கி, இவர்களிலிருந்து ஒரு நியாயாதிபதியை எழும்பப்பண்ணி, எதிரிகளிடமிருந்து இவர்களை விடுவிப்பார். பிறகு, மீண்டும் பாவம், விளைவு எதிரிகள், பிறகு கூக்குரல், அப்புறம் இரட்சிப்பு என்று காரியங்கள் இப்படி சுழற்சியாக நடந்துவந்தது. இந்தச் சுழற்சிதான் ஒட்டுமொத்த நியாயாதிபதிகளின் புத்தகம். இஸ்ரவேல் ஜனங்கள் கொஞ்சமும் வெட்கமில்லாமல் இதே போன்று சுமார் 300 ஆண்டுகளைக் கழித்திருக்கி றார்கள் என்றால் அவர்களின் மனநிலை எப்படியிருந் திருக்குமென்று நீங்களே யூகித்துக் கொள்ளுங்கள்.

இந்த இஸ்ரவேலை இரட்சிக்க தேவனால் எழுப்பப்பட்ட 15 நியாயாதிபதிகளில் இரண்டாவது நியாயாதிபதியான ஏகூத்

மரணமடைந்தபின், இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தபடியால், கர்த்தர் அவர்களை, **யாபீன்** என்னும் கானானிய ராஜாவின் கைகளில் விற்றுப்போட்டார்[4:1,2]. அவனுக்கு தொளாயிரம் இருப்பு இரதங்களோடு, போர்முறை தெரிந்த தளபதியாகிய சிசெராவும் இருந்தான். இந்த யாபீன் இஸ்ரவேலை 20 ஆண்டுகள் கொடுமையாக ஒடுக்கினபடியால் [4:3] ஜனங்கள் வழக்கம் போல கர்த்தரை நோக்கி முறையிட்டார்கள். தேவனும், தம்முடைய நீதியின்படியாக அவர்களுக்கு இரங்கினார்.

இச்சமயத்தில் தான், தெபொராள் என்னும் பெண் தீர்க்கதரிசியை தேவன் எழும்பப் பண்ணி, அவளுக்குத் துணையாக, அபினோகாமின் குமாரனாகிய **பாராக்கையும்** ஏற்படுத்தினார். இவர்கள் பலம்வாய்ந்த யாபீன் படையை பட்டயக் கருக்கினால் கலங்கடித்தார்கள். பராக்கிரமசாலியான சிசெரா, யாகேல் என்னும் ஒரு பெண்ணின் கையில் விழுந்து செத்தான். கர்த்தரின் துணையோடு அவர்கள் கானானின் ராஜாவாகிய யாபீனை முற்றிலும் நிர்மூலமாக்கினார்கள் [4:14-24].

இப்படிக் கர்த்தர் தங்களுக்குக் கொடுத்த வெற்றியைக் கொண்டாடி, நியாயாதிபதியாகிய தெபொராளும், யுத்தத்திற்குத் தலைமை தாங்கின பாராக்கும், தேவனைத் துதித்து வெற்றிக்களிப்புப் பாடல் ஒன்றைப் பாடினார்கள். இப்பாடலின் ஊடே வரும் ஒரு வசனம் தான், **மேரோசைச் சபியுங்கள்** என்பது. பரிசுத்த வேத எழுத்துக்கள், மேரோசின் புத்திரர் அந்நாளில் மேற்கொண்ட நிலையையும்,எடுத்த முடிவையும் கடுமையான வார்த்தைகளால் கண்டனம் செய்வதால், அவர்கள் எப்படிப்பட்ட தவறைச் செய்திருக்கக் கூடுமென்று நாம் சற்று உற்றுநோக்கி, அவைகளிலிருந்து, நமக்கான சில பாடங்களைக் கற்றுக் கொள்ள முடியுமா என்று முயற்சிப்போம்.

## I. மேரோசின் செய்ய வேண்டியதைச் செய்யாத பாவம்

முதலாவதாக, மேரோசின் புத்திரர் தாங்கள் செய்யவேண்டியதைச் செய்யவில்லை என்று நாம் கூறமுடியும். ஏனெனில், இவர்கள் பராக்கிரம சாலிகளுக்கு எதிரான யுத்தத்தில் பங்குபெறவில்லையென்று வசனம் [நியா.5:23] குற்றம் சாட்டுகிறது.

ஒருவேளை, யுத்தத்தில் ஓர் ஊரார் பங்குபெறவில்லையென்பது அவ்வளவு பெரிய குற்றமா? அல்லது அப்படியே குற்றமாக இருந்தாலும், அதற்காக தேவன் இவர்களை இப்படிச் சபிப்பது நியாயமாகுமா என்று நீங்கள் கேட்கக்கூடும். புறக்கண்களால் பார்க்கும்போது எனக்கும் கூட அப்படித்தான் தோன்றுகிறது. ஆனால், நம்முடைய தேவன் நீதியுள்ளவரா யிருக்கிறபடியால் [2.தீமோ.4:8], சரியான காரணமும், காரியமும் இல்லாமல் அப்படி சபித்திருக்கமாட்டார் என்பதையும் நாம் மறந்துவிடக்

கூடாது. ஒரு சமயம் இயேசு ஆண்டவர் அத்திமரத்தைச் சபித்தார் (மத்.21:19). மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது அதுகூட நமக்குத் தவறாகவே தெரிகிறது. ஆனால், அதன் பின்னணியை அலசி ஆராய்ந்து பார்த்தால், உண்மை விளங்கும். ஆகையால், கர்த்தரின் இந்த சாபத்திலும் தேவநீதி இருக்கவே செய்கிறது.

அந்நாளில் யுத்தம் நடந்த பகுதி தாபோர் மலை (4:14). இந்த மேரோசோ இந்த மலைக்கு அருகாமையில் இருந்த ஊர் என்று சொல்லப்படுகிறது. நடந்த யுத்தமோ, இஸ்ரவேலுக்காக கர்த்தரால் நடத்தப்பட்ட யுத்தம். ஒட்டுமொத்த இஸ்ரவேலுக்கும் பொதுவான யுத்தம். இந்த யுத்தத்திலே கலந்து கொள்வதற்கு வெகு தூரத்திலிருந்தெல்லாம் ஜனங்கள் ஆயிரக்கணக்கில் வந்திருந்தனர்(4:14). ஆனால், யுத்தகளத்தை ஒட்டியிருந்த மேரோசின் குடிகளோ, கர்த்தரின் யுத்தத்தைப் புறக்கணித்து ஒதுங்கிக் கொண்டார்கள். கர்த்தரின் பட்சத்தில் நிற்கும் வாய்ப்பு வீடுதேடி, வாசல்வரை வந்தும் அதை அவர்கள் பயன்படுத்தவுமில்லை, தங்கள் பங்கைச் செலுத்தவுமில்லை. ஆகவேதான், **கர்த்தர் பட்சத்தில் துணை நிற்க வரவில்லை** என்று வேதாகமம் குற்றமாக கூறுகிறது.

இவர்கள் துணைக்கு வரவில்லையென்றால் கர்த்தர் தனது யுத்தத்திலே தோற்றுவிடுவாரா என்ன? இல்லை, இல்லவே இல்லை. ஆனாலும், கர்த்தருக்காகப் பாடுபடும் வாய்ப்புக் கிடைக்கும் போது, நாம் அதைத் தவறாமல் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். ஒரு சமயம், மொர்தெகாய், எஸ்தர் ராணியிடம், இதே கருத்தை வலியுறுத்தியே எச்சரிப்பு கொடுத்தான். *நீ இந்தக் காலத்திலே மவுனமாயிருந்தால், யூதருக்குச் சகாயமும் இரட்சிப்பும் வேறொரு இடத்திலிருந்து எழும்பும். அப்பொழுது, நீயும் உன் குடும்பத்தாரும் அழிவீர்கள். நீ இப்படிப்பட்ட காலத்துக்கு உதவியாயிருக்கும்படி உனக்கு ராஜமேன்மை கிடைத்திருக்கலாமே, யாருக்குத் தெரியும்* என்று சொல்லச் சொன்னான் (எஸ்.4:14). புதிய ஏற்பாட்டில் யாக்கோபு ஆசிரியர் இன்னும் ஒருபடி மேலே சென்று மேரோசின் செயலைப் பாவமென்று கூறுகிறார். ஆதலால், *ஒருவன் நன்மை செய்ய அறிந்தவனாயிருந்தும், அதைச் செய்யாமற்போனால், அது அவனுக்குப் பாவமாயிருக்கும்* (யாக்.4:17) என்று. ஆகவே, மேரோசின் புத்திரர் தாங்கள் செய்யவேண்டியதை செய்யாமல் பாவம் செய்திருக்கிறார்கள். தேவனும் அவர்கள் பாவத்தினிமித்தம் அவர்களைத் தண்டித்திருக்கிறார்.

கர்த்தருக்குள் எனக்கருமையானவர்களே, கர்த்தருக்கடுத்த காரியத்தில் நாம் இந்த மேரோசின் புத்திரரைப் போல இருக்கிறோமா? சிந்திப்போம். ஒரு சமயம், மோசே மலையிலிருந்து இறங்கி வரத் தாமதமானபோது. ஜனங்கள் ஆரோனின் துணையோடு பொன்

கன்றுக்குட்டியைச் செய்தார்கள். அதைக் கண்ணுற்ற மோசே, எரிச்சல் மூண்டு, சகோதரனாகிய ஆரோனை ஒரு பிடிபிடித்துவிட்டு, பாளயத்தின் வாசலிலே நின்று, *கர்த்தருடைய பட்சத்தில் இருக்கிறவர்கள் யார்? அவர்கள் என்னிடத்தில் சேரக்கடவர்கள் என்றான். அப்பொழுது, லேவியின் புத்திரர் எல்லோரும் அவனிடத்தில் கூடிவந்தார்கள்* [யாத்.32-26] என்று பார்க்கிறோம்.

ஆகையால், கர்த்தரை நம்பி அவருக்கு ஒப்புக்கொடுத்திருக்கிற பிள்ளைகளாகிய நாம் எப்பொழுதும் கர்த்தரின் பட்சத்தில் நிற்கிறவர்களாகவும், பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக் கொள்ளுகிறவர்களாகவும் இருக்க வேண்டும் [எபே.6:11]. இந்த விஷயத்தில் நாம் மேரோசின் புத்திரரைப் போல நடந்து தேவனுடைய கோபத்திற்கும், சாபத்திற்கும் ஆளாகாமல் லேவியின் புத்திரரைப்போல நடந்து கொள்வது அவசியம்.

## II. மேரோசின் அனலும், குளிருமற்ற பாவம்

இரண்டாவதாக, மேரோசின் அனலும், குளிருமற்ற தன்மையை நாம் குறிப்பிட முடியும்.

ஏனெனில், வேதாகமம் இவர்கள், கர்த்தரின் பட்சத்தில் நிற்கவில்லையென்று குற்றம் சாட்டினாலும், இவர்கள் கர்த்தருக்கு எதிராக யுத்தம் செய்தார்களென்று சொல்லுவதில்லை. ஆயினும், தேவன் இவர்களைக் குற்றவாளிகளாகவே தீர்த்து தண்டித்திருக்கிறார். வெளிப்படுத்தின விசேஷத்தில் உள்ள லவோதிக்கேயருக்கு எழுதப்பட்ட நிருபத்தில், இப்படிப்பட்ட தன்மை தேவனால் வெகுவாகக் கண்டிக்கப்பட்டுள்ளது. *உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்; நீ குளிருமல்ல அனலுமல்ல; நீ குளிராயாவது அனலாயாவது இருந்தால் நலமாயிருக்கும். இப்படி நீ குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாயிருக்கிறபடியினால், உன்னை என் வாயினின்று வாந்தி பண்ணிப்போடுவேன்.* [வெளி.3:15,16]. இந்த லவோதிக்கேயர்களின் பாவமும் மேரோசின் பாவம் போன்றது தான். அவர்கள் தண்டிக்கப்பட்டதற்கு இதுவும் ஒரு காரணம்.

இன்றைக்கு, தேவனுடைய பிள்ளைகளென்று சொல்லிக்கொள்கிற அநேகர், நான் தேவனுக்காக எதுவும் செய்யாவிட்டாலும், தேவனுக்கு விரோதமாக நான் எதுவும் செய்யவில்லையென்று சுயதிருப்திபட்டுக் கொள்கின்றனர். ஆனால், இயேசுகிறிஸ்து அப்படிப்பட்ட நினைப்புக்கு சாட்டையடி கொடுக்கிறதைக் கவனியுங்கள். *என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான்...* [மத்.12:30] என்று. ஆகவே, கர்த்தருடைய காரியத்தில் நாட்டமற்றவர்கள் அவருடைய பிள்ளைகள் என்று சொல்லிக்கொள்ளும் தகுதியை இழந்துவிடுவதோடு, அவருக்கு எதிரானவர்கள் என்ற நிலையையும் பெற்று விடுகிறார்கள்.

ஆகவே, தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் நமது எண்ணத்திலும், செயலிலும், எடுக்கும் முடிவிலும் தெளிவுள்ளவர்களாகவே எப்பொழுதும் இருக்கவேண்டும். தேவன் அதை நம்மிடம் எதிர்பார்க்கிறார். யோசுவா, ஒரு சமயம் ஜனங்களைப் பார்த்து,....*நீங்கள் யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்து கொள்ளுங்கள்...* என்றான் [யோசுவா 24:15] வேறொரு சமயத்தில் எலியா தீர்க்கன் ஜனங்களைப் பார்த்து, *நீங்கள் எந்த மட்டும் இரண்டு நினைவுகளால் குந்திக்குந்தி நடப்பீர்கள்; கர்த்தர் தெய்வமானால் அவரைப் பின்பற்றுங்கள்; பாகால் தெய்வமானால் அவனைப் பின்பற்றுங்கள் என்றான்....* [I இராஜ.18:21] எலியா அப்படிச் சொன்னபோது ஜனங்கள் பிரதியுத்திரமாக ஒன்றும் சொல்லவில்லை என்று வசனம் கூறுகிறது.

அதற்குக் காரணம் என்ன? ஏன் அவர்களால் முடிவெடுக்க முடியவில்லை? கர்த்தர் உண்மையான தெய்வமா அல்லது பாகால் உண்மையான தெய்வமா என்று விளங்கவில்லை. ஏன் விளங்கவில்லை? வேத வசனங்களைவிட்டு வெகுதூரம் வந்துவிட்டார்கள். ஆம், தேவனுடைய வார்த்தைகளை மறந்தது அவர்களை அனலும், குளிருமற்ற நிலைக்குத் தள்ளிச் சென்றது. இதே நிலைதான் இன்றைக்கும் காணப்படுகிறது. பக்தி விஷயத்தில் அனலும், குளிருமற்ற தன்மை கிறிஸ்தவத்தை ஆக்கிரமித்துள்ளது. இதனால், கிறிஸ்தவர்களென்று சொல்லிக் கொண்டிருக்கிற அநேகர், கிறிஸ்துவுக்கு எதிரான இடத்தில் இருக்கிறார்கள். கிறிஸ்துவுக்கும், மெய்க் கிறிஸ்தவத்திற்கும் எதிரான இடத்தில் இருப்பது தண்டனைக்கு ஏதுவானதென்பது, மேரோசின் காரியத்தில் நமக்கு நன்றாக விளங்கிவிட்டது.

ஆணீவே, நாம் தேவ கோபத்திலிருந்து தப்பித்துக்கொள்ள, நடுநிலைவகிக்காமல் கர்த்தரின் பட்சத்தில் நிற்போம். அப்படிக் கர்த்தரின் பட்சத்தில் நிற்பதற்கு வேத அறிவு அவசியமிருக்கிறபடியால் வேத வசனங்களை ஜாக்கிரதையாகப் படிப்போம். அதன்படி, அப்போஸ்தலன் பவுல் சொல்லுகிறது போல, *வார்த்தையினாலாவது, கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரிக்கிற* [கொலோ.3:17] மக்களாக இருப்போம்.

## III. மேரோசின் வாய்ப்பை நழுவ விட்டபாவம்

மூன்றாவதாக, மேரோசின் புத்திரர், தங்களுக்குக் கிடைத்த வாய்ப்பை நழுவ விட்டு விட்டார்கள் என்று நாம் சொல்லமுடியும்.

அவர்கள் கர்த்தருக்கான யுத்தத்தில் பங்கு பெறும்படியான வாய்ப்பு கொடுக்கப்பட்டது. ஆனால், அதை அவர்கள் பயன்படுத்தவில்லை. ஆம், கர்த்தருக்காக யுத்தம் செய்வதற்கு அவர்கள் நாள் கணக்கிலும், மைல் கணக்கிலும் நடக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. அவர்கள்

இருக்கும் இடத்திலேயே, பரலோகத்தின் தேவனுக்காக யுத்தம்செய்யும் வாய்ப்பு தங்கள் தேசத்திற்காக யுத்தம் செய்யும் வாய்ப்பு– தங்களுக்காகவும், தங்கள் பிள்ளைகளுக்காகவும் யுத்தம் செய்யும் வாய்ப்பு வலிய வந்து சேர்ந்தது. ஆனாலும், அவர்கள் அதைப் பயன்படுத்தவில்லை.

லூக்கா எழுதின நற்செய்தி நூலில் இயேசு ஆண்டவரை, விசாரிக்கும் வாய்ப்பைப் பெற்ற பிலாத்து, இயேசுவை விடுவிக்கும் மனதுடையவனாய் இருந்தும் [லூக்.23:20], அவரை விடுவிக்கவில்லை என்று வேதத்திலே வாசிக்கிறோம். விடுவிக்கும் வாய்ப்பு கிடைத்தும் அவன் அதைப் பயன்படுத்தாததை வேதாகமம் குற்றமாகவே கூறுகிறது. வேதாகமத்தை நேசித்து வாசிப்பவர்களும் அவன் பற்றி படிக்கும்போது முகம் சுளிக்கவே செய்கின்றனர். காரணம் என்ன? அவன் கிடைத்த வாய்ப்பை பயன்படுத்தி நீதிமானை விடுவித்திருக்க வேண்டுமென்பது தானே.

இன்னும் நாம் வேதாகமத்தை வாசிக்கும் போது, பலர் தங்களுக்குக் கிடைத்த அரிய வாய்ப்புகளைத் தங்களுடைய வாழ்க்கையில் பயன்படுத்தாமல், தேவனிடத்திலிருந்து தண்டனையைப் பெற்றதோடு, வாழ்க்கையில் தேவனுடைய தண்டனைக்காக காத்தும் இருக்கிறார்களென்பதை அறிந்து கொள்ள முடியும். உதாரணமாக, பவுலை விசாரித்த, அகிரிப்பா இராஜா ஒரு சந்தர்ப்பத்தில், பவுலை நோக்கி *நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங்குறைய நீ என்னைச் சம்மதிக்கப் பண்ணுகிறாய்* என்றான் [அப்.26:28]. இங்கே, ஜீவனுள்ள தேவனுடைய வார்த்தைகளைக்கேட்டு, அதனடிப்படையில் கிறிஸ்தவனாகி, தேவனுடைய நித்திய தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்ளும்படியான வாய்ப்பு இவனுக்குக் கொடுக்கப்பட்டது. ஆனால், அந்த ராஜா அதை பயன்படுத்தவில்லை. அவனுக்காக, தண்டனை காத்துக் கொண்டிருக்கிறது.

இன்னும், ஆளுநர் பேலிக்ஸ்–யிடம், வேறொரு சந்தர்ப்பத்தில், அப்போஸ்தலன் பவுல், *நீதியையும், இச்சையடக்கத்தையும், இனிவரும் நியாயத்தீர்ப்பையும் குறித்துப் பேசுகையில், பேலிக்ஸ் பயமடைந்து, இப்பொழுது நீ போகலாம், எனக்குச் சமயமானபோது உன்னை* அழைப்பிப்பேன் என்றான். [அப்.24:25] இவனுக்கு சமயம் கிடைத்து மீண்டும் பவுலை அழைத்தான் என்று வேதாகமம் எங்கும் காணோம். ஆக, இவனும் தனக்குக்கிடைத்த வாய்ப்பை நழுவவிட்டு நித்திய ஆக்கினைக்காக காத்துக் கொண்டுள்ளான் என்று தெரிகிறது.

அன்பானவர்களே, நமது இரட்சகராகிய இயேசுகிறிஸ்து, மனந்திரும்பும்படியான அழைப்பை எல்லோருக்குமே கொடுத்துள்ளார். *வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்* என்று கூவி அழைக்கிறார். [மத் 11:28] இன்னும், புகழ்பெற்ற மேடைப்பிரசங்கத்தில்

*அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர்* போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார் [அப்.17:30] என்று பவுல் கூறுகிறார். மேலும், வெளிப்படுத்தின விசேஷத்தில். இதோ, *வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்;* ஒருவன் என் *சத்தத்தைக் கேட்டு கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடு போஜனம் பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம் பண்ணுவான்.* [வெளி.3:20] என்றுள்ளது.

மேற்கண்ட வசனங்களெல்லாம் தேவன் மனிதர்களுக்குக் கொடுக்கும் வாய்ப்புகள் பற்றிப் பேசுகிறது. இந்த வாய்ப்புகளை மனிதர் எல்லோரும் பயன்படுத்த வேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறார். ஆகவே தான், மார்ஸ் மேடைப்பிரசங்கத்தில், **மனந்திரும்புவது தேவ கட்டளை** என்று சொல்லப்பட்டிருக்கிறது [அப். 17:30]. இப்பூமியின் வாழ்க்கையில் ஒருவன் இவ்வாய்ப்பை நழுவவிட்டால், மீண்டும் அவனுக்கு வாய்ப்பே இல்லையென்பதை **லாசரு ஐசுவரியவான்** உவமையின் மூலம் நமக்குத் தெளிவாக்கப்பட்டுள்ளது. [லூக்.15:19-31].

ஆகையால், அருமையானவர்களே நாம் எப்படிப்பட்ட மக்களாக உள்ளோம்? இப்பூமியின் வாழ்க்கையில், கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கும் வாய்ப்பை முறையாகப் பயன்படுத்திக் கொண்டுள்ளோமா? அல்லது மேரோசின் மக்களைப்போல வாய்ப்பை நழுவவிட்டுவிட்டு, தேவ கோபத்திற்கு நம்மை ஆயத்தமாக்கிக் கொண்டுள்ளோமா? என்ன செய்து கொண்டுள்ளோம்? *ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்கும்* என்று [எபி 10:31] எபிரேய ஆசிரியர் சொல்லுகிறபடியால், தேவனுக்குப் பயந்து அவர் கற்பனைகளின்படி செய்வோமாக! [பிர.12:13]. அப்படி பயந்து வாழ்ந்தால்தான், பரலோக பாக்கியத்திற்கு பங்குள்ளவர்களாக மாறமுடியும். அப்பாக்கியத்தைப் பெற்றுக்கொள்ள நாம் யாவரும் முயற்சிப்போமாக! ஆமென்!!

✝

---

**ஜெபியுங்கள்! ஜெபியுங்கள்!**

எதிர்வரும் **அக்டோபர்** 23,24 ஆகிய தேதிகளில் [அரசு விடுமுறை நாட்கள்] நடைபெறும் வேதாகமக் கருத்தரங்கிற்காக ஜெபியுங்கள். கலந்துகொள்ளத் திட்டமிடுங்கள்.

**- ஆசிரியர்**

# ஆராதனை வகைகள்

**J.C. சோட்**

**பு**திய ஏற்பாட்டுப் புத்தகத்தின் பக்கங்களைத் திருப்புகையில், அங்கே மூன்றுவித ஆராதனை முறைகள் குறிப்பிடப்பட்டுள்ளதை நாம் காணலாம். அவை ஒவ்வொன்றையும் பற்றி இங்கே நாம் பார்ப்போம். ஒன்றுக்கு மேற்பட்ட ஆராதனை முறைகள் வேதாகமத்தில் காணப்படுவதை நினைவில் வைத்துக் கொள்ளுவோம். இவற்றில், கர்த்தர் நம்மை எந்த வகையான ஆராதனையை ஏறெடுக்கச் சொல்லுகிறார் என்பதை நாம் கண்டுபிடிக்க வேண்டும். இறுதியாக, நம்மைச் சுற்றிலுமுள்ள மக்கள், தேவனை ஆராதிக்கிறோம். என்பதையே, அவைகளை தேவன் ஏற்றுக் கொள்கிறார் என்று நாம் நினைக்கத் தேவையில்லை.

**1. அறியாமையுள்ள ஆராதனை :**

அத்தேனே பட்டணத்தில் பவுல் அவர்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கையில், அந்தப் பட்டணம் விக்கிரகங்களால் நிறைந்திருக்கிறதைக் கண்டு, தன் ஆவியில் மிகுந்த வைராக்கியமடைந்து, ஜெப ஆலயத்தில் யூதரோடும். பக்தியுள்ளவர்களோடும் சந்தைவெளியில் எதிர்ப்பட்டவர்களோடும் தினந்தோறும் சம்பாஷணை பண்ணினான். அப்பொழுது எப்பிக்கூரரும். ஸ்தோயிக்கருமான ஞானிகளில் சிலர் அவனுடனே வாக்குவாதம் பண்ணினார்கள். சிலர், இந்த வாயாடி என்ன பேசப்போகிறான் என்றார்கள். சிலர்: இவன் அந்நிய தேவதைகளை அறிவிக்கிறவனாகக் காண்கிறது என்றார்கள். அவன் இயேசுவையும் உயிர்த்தெழுதலையும் அவர்களுக்குப் பிரசங்கித்தபடியினாலே அப்படிச் சொன்னார்கள். அவர்கள் அவனை மார்ஸ் மேடைக்கு அழைத்துக் கொண்டுபோய்: நீ சொல்லுகிற புதிதான உபதேசம் இன்னதென்று நாங்கள் அறியலாமா? நூதனமான காரியங்களை எங்கள் காதுகள் கேட்கப் பண்ணுகிறாய்; அவைகளின் கருத்து இன்னதென்று அறிய மனதாயிருக்கிறோம் என்றார்கள். அந்த அந்தேனே பட்டணத்தாரெல்லாரும், அங்கே தங்குகிற அந்நியரும், நவமான காரியங்களைச் சொல்லுகிறதிலும், கேட்கிறதிலுமேயொழிய வேறொன்றிலும் பொழுது போக்குகிறதில்லை.

அப்பொழுது பவுல் மார்ஸ் மேடையின் நடுவிலே நின்று அத்தேனரே எந்த விஷயத்திலும் நீங்கள் மிகுந்த தேவபக்தியுள்ளவர்களென்று காண்கிறேன். எப்படியென்றால், நான் சுற்றித்திரிந்து, உங்கள் ஆராதனைக் குரியவைகளைக் கவனித்துப் பார்த்தபொழுது. அறியப்படாத தேவனுக்கு என்று எழுதியிருந்கிற ஒரு பலிபீடத்தைக் கண்டேன்; நீங்கள் அறியாமல் ஆராதிக்கிற அவரையே நான் உங்களுக்கு அறிவிக்கிறேன். உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனானவர்

வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறபடியால் கைகளினால் சுட்டப்பட்ட கோவில்களில் அவர் வாசம் பண்ணுகிறதில்லை. எல்லாருக்கும் ஜீவனையும், சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர் தமக்கு யாதொன்று தேவையானது போல, மனிதர் கைகளால் பணிவிடை கொள்ளுகிறது மில்லை மனித ஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணி, பூமியின் மீதெங்கும் குடியிருக்கச் செய்து, முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார்; கர்த்தராகிய தம்மை அவர்கள் தடவியாகிலும் கண்டுபிடிக்கத்தக்கதாகத் நம்மை தேடும்படிக்கு அப்படித் செய்தார், அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவர் அல்லவே. ஏனெனில், அவருக்குள் நாம் பிழைக்கிறோம். அசைகிறோம் இருக்கிறோம்; அப்படியே உங்கள் புலவர்களிலும் சிலர். அவருடைய சந்ததியார் என்று சொல்லியிருக்கிறார்கள். நாம் தேவனுடைய சந்ததியாராயிருக்க மனிதருடைய சித்திர வேலையினாலும் யுத்தியினாலும் உருவாக்கின பொன், வெள்ளி, கல் இளவகளுக்குத் தெய்வம் ஒப்பாயிருக்குமென்று நாம் நினைக்கலாகாது. அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குள்ள மனிதரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார். மேலும் ஒரு நாளை குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனிதனைக் கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார். அந்த மனிதனை மரித்தோரிலிருந்து எழுப்பினநினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப் பண்ணினார் என்றான். (அப். 17:16–31).

அத்தேனே பட்டணத்தில் விக்கிரக வழிபாட்டை பவுல் சந்தித்தான் என்பதை நீங்கள் கவனிக்க முடியும். அறியாமையால் அவ்வாறு நடைபெறுவதைச் சுட்டிக்காட்டி அவன் குற்றஞ்சாட்டுகிறான். பின்னர், உண்மையும், ஜீவனுமுள்ள தேவனைப்பற்றி அவர்களுக்கு அவன்

அவர்கள் விக்கிரகங்களை ஏன் வணங்கிக் கொண்டிருந்தனர்? விக்கிரகங்களுக்கு ஒரு மனிதன் ஏன் தலை வணங்க வேண்டும்? கல், மரம், உலோகம், ஆகியவற்றால் செய்யப்பட்டதே விக்கிரகம் ஆகும். அதற்கு ஜீவனும், ஆவியும் கிடையாது. அது பார்க்கவோ, கேட்கவோ, நுகரவோ, பேசவோ, அசையவோ, சிந்திக்கவோ, அல்லது ஆசீர்வதிக்கவோ சக்தியற்ற ஒரு ஜடப்பொருள். இப்படிப்பட்ட ஒரு பொருளால் உருவாக்கப்பட்ட விக்கிரகம் இறுதியிலே ''கடவுள்'' எனக் கருதப்படுகிறது. ஆனால், பரலோகத்தின் தேவனை அறியாதவர்கள் ஒரு விக்கிரகத்திற்கோ அல்லது இயற்கையின் ஒரு பொருளுக்கோ அல்லது உயிரோடிருக்கும் அல்லது மரித்துப்போன மனிதனுக்கோ தலை வணங்குவர்.

கடந்த காலத்தைப்போல இன்றும் உலகெங்கிலும் உள்ள மக்கள் தொடர்ந்து விக்கிரகத்தை வணங்குகின்றனர். காரணம் என்ன? இன்னும் அறியாமைதான் பிரச்சினையாகத் தொடருகிறது. ஒரு கிறிஸ்தவனோ அல்லது தன்னை கிறிஸ்தவன் என அழைத்துக் கொள்ளுகிறவன் அல்லது புத்திசாலியான விவரங்கள் அறிந்த மனிதன் எவனும் ஒரு விக்கிரகத்தையோ' உருவத்தையோ, படத்தையோ வழிபடமாட்டான்.

**2. வீணான ஆராதனை**

கிறிஸ்து கூறினார். மனிதருடைய கற்பனைகளை உயதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று ஏசாயா தீர்க்கதரிசி நன்றாய் சொல்லியிருக்கிறான் என்றார். (மத். 15:9). மீண்டுமாக அவர் சொன்னார். பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானே யல்லாமல், என்னை நோக்கி, கர்த்தாவே! கர்த்தாவே என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்.'' (மத் 7:21–23)

கர்த்தரின் மக்கள் வித்தியாசமான விதங்களில் ஆராதிக்கலாம் என்றும், அவர்கள் அதில் நேர்மையுடனும், உண்மையுடனும் இருக்கும்வரை அவர்களுடைய ஆராதனை தேவனால் ஏற்றுக் கொள்ளப்படும் என்று பகிரங்கமாக இன்றும் கற்பிக்கப்படுகிறது. இது உண்மையல்ல. மனிதருடைய சட்டங்கள், கற்பனைகளின் படியான ஆராதனை வீணான ஆராதனையாகும். **வீணான** என்னும் வார்த்தைக்கு காலியான, பயனற்ற, உபயோகமற்ற எனப்பொருள். வேறு விதமாகக் கூறினால், இப்படிப்பட்ட ஆராதனை கர்த்தரால் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

**கிறிஸ்துவின் நாமத்தில்** ஒரு மக்கள் கூட்டம் கூடுவதால் இட்டும் அவர்களுடைய ஆராதனை ஏற்றுக் கொள்ளப்படும் என்று பொருளல்ல. முதலாவதாக, ஒரு பிரிவினை சபையின் அங்கத்தினர்களாக அவர்கள் கூடும்போது, அவர்களுடைய பிரிவினை சபையின் பெயரால் கூடுகிறார்களே அன்றி, கிறிஸ்துவின் நாமத்தில் அவர்கள் கூடுவதில்லை. அடுத்து ஒரு பிரிவினைச் சபையின் ஆராதனை அந்த அமைப்பின் பிரகாரமாகவே நடத்தப்படும். நியாயத்தீர்ப்பு நாளிலே, பலர் கர்த்தரின் முன்பாக நின்று கொண்டு, அவர்கள் செய்தவைகளை யெல்லாம் அவருக்கு நினைப்பூட்டுவார்கள் என்றும், ஆனால்

அவருடைய கற்பனைகளுக்கு அவர்கள் கீழ்படியாத காரணத்தாலும், அவருடைய குடும்பத்தின் அங்கத்தினர்களாக அவர்கள் இல்லாததாலும், அவர்களை அவர் சபித்துப் புறம்பாக்குவார் என கர்த்தர் கூறுகிறார்.

உங்களுடைய ஆராதனை மனிதர்களுடைய உபதேசங்களுக்கு ஏற்ப இருந்தால், அதாவது, தேவனுடைய வசனங்களில் காணப்படாத காரியங்களை நீங்கள் ஆராதனையில் செய்தால், உங்கள் ஆராதனை வீணானது. ஆகவே, அது கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. எனவே, இப்பொழுது நீங்கள் உங்கள் நிலையை சோதித்துப் பார்க்க வேண்டியது அவசியம்.

**3. உண்மையான ஆராதனை :**

தேவன் ஆவியாயிருக்கிறார். அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும் என ஆராதனை பற்றி கிறிஸ்து கூறினார். (யோவான். 4:24).

இங்கே சில காரியங்களை நாம் கவனிப்போம். முதலில், ஏற்கனவே நாம் முந்தைய பாடத்தில் கற்றுக்கொண்டது போல, நமது ஆராதனைக்கு உரியவர் தேவன் ஆவார். அடுத்து, அவரை ஆராதிக்கிறவர்கள் **கர்த்தருடைய நிபந்தனைகளின்படி** அவரை ஆராதிக்க வேண்டும். தேவனை ஆராதிக்க யாரும் உங்களை வற்புறுத்தப் போவதில்லை. ஆனால், அவரை ஆராதிக்கத் தேர்ந்தெடுப்பவர்கள், தங்களுடைய அல்லது பிறருடைய நிபந்தனைகளின்படியின்றி, கர்த்தருடைய நிபந்தனை களின்படி அவரை ஆராதிக்கவேண்டும். மூன்றாவதாக, ஆராதனை உண்மையோடும் ஆவியோடும் செய்யப்பட வேண்டும். அதற்கு அர்த்தம் என்ன? நமது ஆராதனை ஆவிக்குரிய விதத்தில், அதாவது நேர்மையாகவும் புரிந்து கொண்டும், தாழ்மையுடனும் அமைய வேண்டும். உண்மையோடு என்று கூறும்போது, நமது ஆராதனை வசனத்தில் எழுதப்பட்ட காரியங்களின்படியே செய்யப்பட வேண்டும். இது மிகவும் எளிமையாக இருக்கும்! அவர்கள் சகலவிதமான சடங்குகள், நடைமுறைகள், மரபுகள், பாரம்பரியங்கள் அனைத்தையும் கடைபிடிக்க விரும்புகின்றனர். ஆனால், கர்த்தர் அவைகளை விரும்புவதில்லையே. அவருடைய கட்டளைப்படி அவரை ஆராதிப்பதையே அவர் விரும்புகிறார். இதற்கு அதிகமாகவோ, குறைவாகவோ அவர் கேட்கவில்லை.

புதிய ஏற்பாடு கற்பிக்கும் ஆராதனை முறை இதுவே. நாம் தொடர்ந்து படிக்கும்போது இவ்வாறாகத்தான் ஆகிக்கிறிஸ்தவர்கள் ஆராதித்தார்கள் என்பதையும், அவ்வாறே நாம் ஆராதிக்க வேண்டும் என்பதையும் நாம் காணப்போகிறோம். நாம் அனைவரும் அவ்வாறு செய்யும்போது, ஒரேவிதமாக ஆராதனை செய்வோம்: கர்த்தர் நமது ஆராதனையை ஏற்றுக் கொள்வார்.

பெண்கள் பகுதி

# சோதோமுக்குள் சென்று ஒரு பார்வை

Sis. ரேச்சல் ராஜநாயகம்

**கி**றிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே! கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். பழைய ஏற்பாட்டில் இடம் பெற்றிருக்கும் இந்த சோதோம் பட்டணம் பற்றி இம்மாதம் படித்து அதிலிருந்து நாம் கற்றுக் கொள்ளக்கூடிய பாடங்கள் என்ன வென்பதைப் பார்ப்போம்.

செழிப்பு மிக்க யோர்தான் நதியின் ஓரத்திலே சவக்கடலின் வடக்குப் பகுதியில் இந்த சோதோம் அமைந்திருந்தது. ஆதி. 13:10-ம் வசனத்தில் நாம் பார்க்கும்பொழுது அப்பொழுது லோத்து தன் கண்களை சம பூமி முழுவதும் நீர்வளம் பொருந்தினதாயிருக்கக்கண்டான். கர்த்தர் சோதோமையும், கொமோராவையும் அழிக்கும் முன்னே சோவாருக்குப்போம் வழி மட்டும் அது கர்த்தருடைய தோட்டத்தைப் போலவும், எகிப்து தேசத்தைப் போலவும் இருந்தது என்று வாசிக்கிறோம். இவ்வளவு செழிப்புள்ள இடத்தில் அமைந்திருந்த பட்டணத்தை தேவன் ஏன் அழித்தார்? அதே அதிகாரம் 13-ம் வசனம், 'சோதோமின் ஜனங்கள் பொல்லாதவர்களும், கர்த்தருக்கு முன்பாக மகா பாவிகளுமாய் இருந்தார்கள் என்று கூறுகிறது. மேலும், ஆதி. 18:20,21, *பின்பு கர்த்தர் சோதோம் கொமோராவின் கூக்குரல் பெரிதாயிருப்பதினாலும், அவைகளின் பாவம் மிகவும் கொடிதாயிருப்பதினாலும் என்று சொல்கிறார்.* தேவனுடைய மகாநீதியான நியாயத்தீர்ப்பு சோதோமின் மேல் வந்தபடியால் துன்மார்க்கத்தனம் பெருகியே இருந்தது என்று நாம் அறிந்து கொள்ளலாம். 19:24,25-ல் *அப்பொழுது கர்த்தர் சோதோமின் மேலும், கொமோராவின் மேலும் கர்த்தராலே வானத்திலிருந்து கந்தகத்தையும், அக்கினியையும் வருஷிக்கப் பண்ணி அந்தப் பட்டணங்களையும் அந்த சம பூமி யனைத்தையும், அந்தப் பட்டணங்களின் எல்லாக் குடிகளையும், பூமியின் பயிரையும் அழித்துப்போட்டார்* என்று சோதோமின் அழிவு விவரிக்கப் பட்டுள்ளது.

அருமையானவர்களே! ஆதியாகமத்திலே இடம் பெற்றுள்ள இச்சம்பவமானது வேதாகமம் முழுவதும் பேசப்படுகிறது. விசேஷமாக தீர்க்கதரிசனப் புத்தகங்களிலே சோதோம் நினைக்கப்படுகிறது. எசேக்கியா தீர்க்கன் இஸ்ரவேல் மக்களின் மீறுதல்களை குறித்து அங்கலாய்க்கும் போது சோதோமை உதாரணமாகக் காட்டுகிறார். *இதோ, கர்வமும், ஆகாரத்திரட்சியும், நிர்விசாரமான சாங்கோபாங்கமுமாகிய இவைகளே உன் சகோதரியான சோதோமின் அக்கிரமம்.* இவைகளே அவளிடத்திலும் அவள் குமாரத்திகளிடத்திலும் இருந்தன. சிறுமையும் எளிமையுமானவனுடைய கையை அவள் பலப்படுத்தவில்லை. *அவர்கள் தங்களை உயர்த்தி.* என் *முகத்துக்கு முன்பாக அருவருப்பானதைச் செய்தார்கள். அதை நான் கண்டபோது அவர்களை ஒழித்து விட்டேன்* (எசே. 16:49,50).

விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை. இந்தப் பெருமை என்பது மனிதன் செய்யும் எல்லாப் பாவங்களுக்கும் அடித்தளமாக இருக்கிறது. கிறிஸ்தவர்களிடையேயும், சபையிலும், இப்பெருமை என்ற பாவம் இருக்கத்தான் செய்கிறது.

ஆகாரத் திரட்சி, நிர்விசாரமான சாங்கோபாங்கம் சோதோமில் காணப்பட்டது. நிறைந்து வழிந்த ஓர் நிலை. இதைப் பாவம் என்று சொல்வதை விட பாவத்தை பத்திரமாய் பாதுகாத்து வளரச் செய்து பாவத்தை பூரணப்படுத்துவது. இந்த நிலை ஒரு தனி நபராயிருந்தாலும் சரி, குடும்பம், சபை, சமுதாயம் எதுவாயிருந்தாலும் பயத்தையூட்டக்கூடிய ஓர் நிலை தான். இப்பேர்ப்பட்ட நிலை எங்கிருந்தாலும் அதற்கு பிறகு ஓர் அழிவை சந்திக்க நேரிடும் என்பது நமக்கு எச்சரிக்கையாக இருக்க வேண்டும். மாறாக, பாடு, உபத்திரவம் போன்றவை ஒருபோதும் அழிவைக் கொண்டு வராது. சபைகளிலும், குடும்பங்களிலும் இதுதான் உண்மை. செல்வம், திரட்சி போன்றவைகள் அழிவுக்கு காரணமாகின்றன.

சிறுமையும், எளிமையுமானவனுடைய கையை அவள் பலப்படுத்தவில்லை. தங்களையும் வஞ்சித்து எளிமையானவர்களைக் கண்டுகொள்ளவில்லை. இருதயமற்ற இந்நிலையை தேவன் பார்த்தும் பாராமலும் இருக்கமாட்டார். மனம்போன போக்கிலே வாழ்ந்து, சுய ஒழுக்கத்தை வெறுத்து, பிறருக்கு உணவு, தண்ணீர் போன்றவைகளை கொடுப்பதை வெறுத்தார்கள். மாற்கு 14:7–ல், *தரித்திரர் எப்போதும் உங்களிடத்தில் இருக்கிறார்கள். உங்களுக்கு மனதுண்டாகும் போதெல்லாம் நீங்கள் அவர்களுக்கு நன்மை செய்யலாம்* என்று நம்மை சோதித்துப் பார்த்துக் கொள்ள தேவன் கொடுத்த சந்தர்ப்பங்களாகக் கூட இருக்கலாம்.

மேலும், பெருமையான தங்கள் எண்ணங்களால் தகுதியே இல்லாவிட்டாலும் உயர்த்தி தேவனுக்கு கோபமூட்டினார்கள். அருவருப்பானதைச் செய்தார்கள் என்று கூறுகிறபோது யெகோவாவாகிய தேவனை மாத்திரம் சேவிக்காமல் எல்லாவற்றையும் சேவித்து, எல்லா பாவத்தையும், தீமையும் செய்து உலகத்திலிருந்து தங்களை பிரித்துக் காட்டாத ஓர் நிலை. இது தேவனுக்கு அருவருப்பானது. சரி, எரேமியா தீர்க்கன் என்ன சொல்கிறார் என்று பார்ப்போம். எரேமி 23:14ம் வசனத்தில், *எருசலேமின் தீர்க்கதரிசிகளிலும் திடுக்கிடத்தக்க காரியத்தைக் காண்கிறேன். விபசாரம் பண்ணி, வஞ்சகமாய் நடந்து, ஒருவனும் தன் பொல்லாப்பை விட்டுத் திரும்பாதபடிக்குப் பொல்லாதவர்களின் கைகளைத் திடப்படுத்துகிறார்கள். அவர்கள் எல்லாரும் எனக்குச் சோதோமைப்போலும், அதின் குடிகள் கொமோராவைப் போலும் இருக்கிறார்கள்* என்கிறார்.

விபச்சாரம் தேவன் அருவருக்கக்கூடிய ஒன்று. மாம்சத்தில் இச்சையுடையவர்கள் அழிவைக் கண்டாலொழிய மனந்திரும்ப மாட்டார்கள். ஆசை ஒரு தீ போன்றது, பற்றியெரிந்தால் அணைப்பது மிகக் கடினம். இச்சை கொடியது. அது தன்னை உடையவர்களை கொன்று போடும். வஞ்சகம் என்றால் பொய் வழி. ஏதோ ஒரு சமயத்திலோ, தெரிந்தோ, தெரியாமலோ பேசும் பொய் அல்ல. வாழ்க்கையே பொய்யானது. மேலும்,

பொல்லாதவர்களின் கையை திடப்படுத்துவது. இதுவும் மோசமான காரியம். *துன்மார்க்கனை நீதிமானாக்குகிறவனும், நீதிமானை குற்றவாளியாக்கு கிறவனுமாகிய இவ்விருவரும் கர்த்தருக்கு அருவருப்பானவர்கள்* (நீதி. 17:15).

அடுத்ததாக, ஏசாயா தீர்க்கன் எதை வெளிப்படுத்துகிறாரென்றால் *அவர்கள் முகப்பார்வை அவர்களுக்கு விரோதமாய்ச் சாட்சியிடும்; அவர்கள் தங்கள் பாவத்தை மறைக்காமல், சோதோம் ஊராரைப் போல வெளிப்படுத்துகிறார்கள். அவர்கள் ஆத்துமாவுக்கு ஐயோ! தங்களுக்கே தீமையை வருவித்துக்கொள்கிறார்கள்* (ஏசாயா 3:9) பாவத்தை பிறர் பார்க்கிறார்களே என்ற எண்ணம் இல்லாமல் மிகவும் தைரியமாக, வெட்கமில்லாமல் செய்வது. மனசாட்சி இல்லாமல், கொஞ்சமும் வருத்தப்படாமல் துணிகரமாக பாவங்களைச் செய்வது. ஆதி. 19:4,5 ஆகிய வசனங்களை வாசித்துப் பார்த்தால் இவைகள் நமக்கு சிறிதளவு புரியும். மேலும், யூதா 7-ம் வசனத்தில், *அப்படியே சோதோம், கொமோரா பட்டணத்தார்களும், அவைகளைச் சூழ்ந்த பட்டணத்தார்களும், அவர்களைப் போல் விபச்சாரம் பண்ணி அந்நிய மாம்சத்தைத் தொடர்ந்து நித்திய அக்கினியின் ஆக்கினையை அடைந்து, திருஷ்டாந்தமாக வைக்கப்பட்டி ருக்கிறார்கள்* (யூதா 7). அருமையானவர்களே, சோதோமைப்பற்றிய இந்தக் காரியங்கள் இன்றைய காலக் கட்டத்துக்கும் மிகச் சரியாகப் பொருந்தும். கண் இருக்கிற யாரும், காதுகள் இருக்கிற எவரும் இந்த உண்மையை எல்லா இடங்களிலும் காணவும், கேட்கவும் முடியும். ஆதி. 18:32-ல் 10 நீதிமான்கள் இருந்தால் பட்டணம் அழிக்கப்பட்டிருக்காது என்று வாசிக்கிறோம். நீதி காணப்படுமானால் தேவனுடைய இரக்கம் அங்கே கட்டாயம் இருக்கும். நாம் தேவனுடைய வேலையிலே நம்மை ஈடுபடுத்திக் கொள்வோம். இழந்து போனதைத் தேடுவோம்.

நித்திய ஆக்கினையை அடைந்த சோதோம் இன்று திருஷ்டாந்தமாக வைக்கப்பட்டுள்ளது (யூதா 7). ஆனால், நீதிமான்களுக்கு இரக்கம் காட்டு கிறார். *நாள்தோறும் அவர்களுடைய அக்கிரமக்கிரியைகளைக் கண்டு கேட்டு நீதியுள்ள தன்னுடைய இருதயத்தில் வாதிக்கப்பட்ட நீதிமானாகிய லோத்தை அவர் இரட்சித்திருக்க, கர்த்தர் தேவபக்தியுள்ளவர்களைச் சோதனையினின்று இரட்சிக்கவும், அக்கிரமக்காரரை ஆக்கினைக்குள்ளானவர்களாக நியாயத்தீர்ப்பு நாளுக்கு வைக்கவும் அறிந்திருக்கிறார்* (2 பேதுரு 2.8.9. எவ்வளவு ஆறுதலை இவ்வசனம் நமக்குத் தருகிறது. மேலும், மத். 10:15ல் *நியாயத் தீர்ப்பு நாளிலே அந்தப் பட்டணத்திற்கு நேரிடுவதைப் பார்க்கிலும் சோதோம் கொமோரா நாட்டிற்கு நேரிடுவது இலகுவாயிருக்கும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்* என்று அருமை இரட்சகர் இயேசு கிறிஸ்து கூறுகிறார். யாருக்கென்றால் தேவனையும், அவருடைய வார்த்தைகளையும் ஏற்றுக் கொள்ளாதவர்களுக்கு என்று 14-ம் வசனம் கூறுகிறது.

அன்பு சகோதரிகளே! நிச்சயம் சோதோமுக்குள் சென்று நாம் பார்த்தவைகளை நமக்கும் நம் குடும்பத்துக்கும் பிரயோஜனமாயிருக்கும் என்று நம்புகிறேன். ஆமென்.

✝

வாலிபர் பகுதி

# கேட்பது கிடைக்கவில்லையென்றால்...

Dr. **ஏபில் நாயகம்**

பிரியமான வாலிப சகோதர, சகோதரிகளே உங்கள் யாவருக்கும் உயிர்த்தெழுந்த இயேசுவின் இன்ப நல்நாமத்தில் வாழ்த்துக்கள்! நம் வாழ்க்கையின் சில நேரங்களில், தேவனிடத்தில் நாம் விரும்பின காரியம் ஒன்றைக்கேட்டு, அது கிடைக்காமல் அதினிமித்தம் நாம் சோர்வடைந்திருக்க வாய்ப்புண்டு. ஏன் அது எனக்கு கிடைக்காமல் போய்விட்டது என்று நிச்சயம் யோசித்து இருப்போம். ஏன் அதைப் பெற்றுக் கொள்ளவில்லை என்பதை முழுமனதோடு ஏற்றுக்கொள்ள முடியாமல் கூட இருக்கும். அந்நேரங்களில் தேவன் ஏன் அப்படிச் செய்தார் என்ற புரிதல் அவ்வளவு சீக்கிரம் வருவதில்லை. ஆனால், தேவன், அதையும் ஒரு நோக்கத்தோடு தான் கொடுக்காமல் இருந்திருப்பார் என்று புரிந்து கொள்ள வேண்டும். தேவனின் வழி நடத்துதலை நம்மால் முழுமையாக அறிந்து கொள்ள இயலாது.

மாற்கு 5-ம் அதிகாரம் 1-20 வரையுள்ள வேத பகுதியை நாம் தியானிப்பதற்காகத் தெரிந்து கொள்வோம். அதில் இயேசுவானவர் அசுத்த ஆவியுள்ள ஒரு மனுஷனை குணமாக்கினார் என்று வாசிக்க முடியும். இருபது வசனங்கள் அடங்கிய இந்த வேத பகுதியில் இரண்டு முறை இயேசு கேட்டவர்களின் விருப்பத்திற்கேற்ப செய்தார். ஒரு முறை விரும்பினதை நிறைவேற்றவில்லை. யார் யார் கேட்டார்கள்? எவருடைய வேண்டுதலுக்கிணங்க கொடுக்கப்பட்டது? யாருக்கு கொடுக்கப்படவில்லை என்பதைத் தியானிப்போம்.

5ம் அதிகாரத்தில் 1-13 வசனங்களை வாசிக்கும் போது, முதலாவது வேண்டுதலை கவனிக்க முடியும். அசுத்த ஆவியுள்ள மனுஷன் இயேசுவை தூரத்திலே கண்டு, ஓடிவந்து அவரைப் பணிந்து கொண்டான். அந்த மனிதனுக்குள் இருந்த அந்த அசுத்த ஆவிகளை இயேசு துரத்திவிட சித்தமாயிருந்த போது, அந்த பிசாசுகள் .... பன்றிகளுக்குள்ளே எங்களை அனுப்பும் என்று அவரை வேண்டிக்கொண்டான் (வசனம் 12).

அடுத்த வசனத்தில், (13ல்) ... அசுத்த ஆவிகள் புறப்பட்டுப் பன்றிகளுக்குள்ளே போயின.... என்று வாசிக்கிறோம். இங்கே பிசாசுகள் இயேசுவினிடத்தில் தாங்கள் விரும்பின ஒரு காரியத்தை கேட்டபொழுது, இயேசு பிசாசுகள் கேட்டுக் கொண்டபடியே செய்தார். பிசாசுகள் வேண்டிக்கொண்டபடியே பன்றிகளுக்குள்ளே அவைகளை அனுப்பினார்.

தொடர்ந்து மாற்கு 5ம் அதகாரம் 14-17 வரை வாசிக்கும் பொழுது, இரண்டாவது முறையாக இயேசுவிடம் வேண்டி கேட்டுக் கொள்ளப்பட்டதைப் பார்க்க முடியும். இங்கே பன்றிகளை மேய்த்தவர்கள்,

சம்பவித்ததைப் பட்டணங்களிலும், சுற்றுப் புறங்களிலும் அறிவித்தார்கள். பிசாசு பிடித்திருந்த மனிதன் புத்தி தெளிந்து இருப்பதைக் கண்டு அந்தப் பட்டணத்து ஜனங்கள் வியந்தார்கள்.

இயேசுவின் வல்லமையும் அவர் தேவனுடைய குமாரன் என்பதையும் அவர்கள் புரிந்து கொள்ளாமல், பயந்து, அவரை தங்கள் பட்டணங்களின் எல்லைகளை விட்டுப் போகும்படி வேண்டிக்கொண்டார்கள். (வசனம் :7) இயேசு அவர்களுடைய விருப்பத்தையும் நிறைவேற்றினார். பிறகு பட்டணத்தை விட்டு வெளியே படகில் ஏறிச் சென்றார்.

வசனம் 18-20 வரை வாசித்தால், மூன்றாவது முறை பிசாசுகள் நீங்கி குணமடைந்த மனிதனால் ஒரு வேண்டுதல் இயேசுவிடம் வைக்கப்பட்டது. வசனம் 18-ல் ... பிசாசு பிடித்தவன் அவரோடே கூட இருக்கும்படி தனக்கு உத்தரவு கொடுக்க அவரை வேண்டிக் கொண்டான்... அடுத்த வசனத்தில் நாம் வாசிக்கும் போது, இயேசு அவனுக்கு உத்தரவு கொடாமல்: நீ உன் இனத்தாரிடத்தில் உன் வீட்டிற்குப் போய். கர்த்தர் உனக்கு இரங்கி, உனக்குச் செய்தவைகளையெல்லாம் அவர்களுக்கு அறிவியென்று சொன்னார்.

இங்கே குணமடைந்த மனிதன் வேண்டிக் கொண்ட காரியத்தை இயேசு கொடுக்கவில்லை. மாறாக, கர்த்தரின் வல்லமையை பிறருக்குச் சொல்ல வேண்டும் என்று அவனை அனுப்பிவிட்டார்.

பிரியமானவர்களே! இந்த மூன்று வேண்டுதல்களையும் நீங்கள் நன்றாக கவனியுங்கள். முதலில், பிசாசுகளின் வேண்டுதலை இயேசு நிறைவேற்றினார். இரண்டாவது, அந்த பட்டணத்தார்களின் வேண்டுதலுக்கிணங்கி அவ்வூரை விட்டு வெளியேறி அவர்களின் வேண்டுதலையும் நிறைவேற்றினார். ஆனால், இயேசுவோடு இருக்க வேண்டும், அவருக்கு பின் செல்ல வேண்டும் என்று விரும்பிய மனிதனின் வேண்டுதலை அவர் நிராகரித்தார்.

இதை மேலோட்டமாக பார்க்கும் போது புரிந்து கொள்வதற்கு சற்று சிரமமாகவே இருக்கிறது. பிசாசுகளின் வேண்டுதலை நிறைவேற்றினவர், தன்னை அறியாத, விசுவாசியாத ஜனங்களின் வேண்டுதலை நிறைவேற்றினவர், தனக்குப் பின் செல்ல ஆயத்தமாக இருந்த மனிதனின் வேண்டுதலை ஏன் நிறைவேற்றவில்லை ?

அப்படியென்ன தவறாகக் கேட்டுவிட்டான்? இயேசுவைப் பின் தொடர்ந்து செல்வது என்ற முடிவு நல்ல முடிவு தானே? பிசாசுகளே விசுவாசித்த இயேசுவை, அந்த பட்டணத்து ஜனங்களால் கண்டு கொள்ள கூட முடியவில்லை. அப்படியிருந்தும், அவர்களின் வேண்டுதலையே நிறைவேற்றினாரே. இந்த மனிதனுக்கும் அவனின் வேண்டுதலை நிறைவேற்றி இருந்தால் நன்றாக இருந்திருக்குமே! அதுதானே நியாயம் என்றெல்லாம் நம் எண்ணங்கள் நம்மை சிந்திக்க வைக்கும்.

ஆம், நம் வாழ்க்கையிலும் நாம் இது போன்று பல கேள்விகளைக் கேட்டிருப்போம். நாம் கேட்டுக் கிடைக்காத ஒன்று, பிறர் கேட்டு நடந்துவிட்டது. ஆனால், நாம் கேட்டு நடக்கவில்லையே என்பதற்காக, இப்படிபபட்ட கேள்விகளும், சிந்தனைகளும் நமக்கு நிச்சயம் தோன்றியிருக்கும். ஆனால், இந்த வேத பகுதி நமக்கு எதைக் கற்றுத்தருகிறது.

வசனம் 19-20 ல் வாசித்து நாம் கற்றுக் கொள்ள வேண்டிய காரியம் என்ன? ஆம், இயேசு அவன் வேண்டுதலை நிராகரித்தற்கான நோக்கம் ஒன்று இருந்தது. அது என்ன? தன்னை எந்தப் பட்டணத்திலிருந்து வெளியே போகச் சொன்னார்களோ, அதே பட்டணத்து ஜனங்களுக்கு இயேசுவைப் பற்றியும், கர்த்தர் அவனுக்கு செய்தவைகளைப் பற்றியும் சொல்லிப் புரிய வைக்க வேண்டும் என்பதற்காக அவனுடைய வேண்டுதல் நிராகரிக்கப்பட்டது. தன்னை அறியாத அப்பட்டணத்து ஜனங்கள் குணமடைந்த மனிதன் மூலம் இயேசுவை யார் என்று அடையாளம் கண்டு கொள்ள வேண்டும் என்ற **பெரிய நோக்கம்** அந்த நிராகரிப்பின் நோக்கமாய் இருந்தது.

தன்னுடைய வேண்டுதல் நிராகரிக்கப்பட்டது என்பதால் அவன் **கவலைப்படவில்லை.** ஏன் **என்று கேள்வி கேட்கவில்லை.** மாறாக, இயேசுவின் நோக்கத்தைப் புரிந்துகொண்டு, அவர் கட்டளையிட்டபடியே இயேசுவைப் பற்றி பிரசித்தம் பண்ணினான். அவனிமித்தம் ஜனங்கள் எல்லாரும் ஆச்சரியப்பட்டார்கள்.

பிரியமானவர்களே, நம் வாழ்க்கையிலும் சில நேரங்களில் நாம் வேண்டிக்கொண்டது கிடைக்காமல் இருக்கலாம். அது நாம் விரும்பி வேண்டிக்கொண்ட நல்லதொரு காரியமாகக் கூட இருக்கலாம். ஆனால், ஒரு வேளை அது நமக்கு வழங்கப்படாமல் இருக்குமானால் சோர்ந்து போகத் தேவையில்லை. ஏன் என்று கவலைப்படத் தேவையில்லை. சர்வ வல்லமையுள்ள நம் தேவன் ஏதோ ஒரு நோக்கத்தோடு தான் அப்படி வழங்காமல் இருப்பார் என்ற விசுவாசம் நமக்கு இருக்க வேண்டியது அவசியம்.

அவர் சர்வ வல்லவர். எதுவும் அவருக்கு சாத்தியம். தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. ஆனாலும், அவருடைய நோக்கததையும், சித்தத்தையும் நாம் லேசாக கருதி விட வேண்டாம். கொடுப்பார் - கொடாமற்போனாலும் அதற்கு ஒரு நோக்கம் இருக்கும் என்று அவருடைய சித்தத்திற்கு ஒப்புக் கொடுக்கிற பிள்ளைகளாக இருப்போம்.

இச்சம்பவத்தை மனதில் கொண்டவர்களாக நம்முடைய விசுவாசப் பயணத்தில் முன்னேறிச் செல்வோம். ஆமென் ! ✝

சிறுவர் பகுதி

# பொல்லாத ஊழியக்காரன்

**Dr.** ப்ரெய்சி

**ஹெ**லோ குழந்தைகளே! நீங்கள் அனைவரும் நன்றாக இருப்பீர்கள் என்று நம்புகிறோம்.எங்கள் கட்டுரைகளை ஒவ்வொரு மாதமும் படித்து வருகிறீர்கள் என்று நாங்கள் நம்புகிறோம். இம்மாதம் இயேசு சொன்ன வேற ஒரு உவமையைப் பார்ப்போம்.

மத்தேயு 18:23–35 ல், நாம் ஓர் அரசன் தன் கணக்குகளை தீர்க்க விரும்புவது பற்றிப் பார்க்கிறோம். பத்தாயிரம் தாலந்து கடன்பட்டிருந்த அவனுடைய வேலைக்காரன் தன்னையும் தன் குடும்பத்தையும் விற்காதே என்று கெஞ்சியபோது அரசன் மனதிரங்கி, அவனை விடுதலை பண்ணி, கடனையும் அவனுக்கு மன்னித்துவிட்டான். அப்படியிருக்க, அந்த ஊழியக்காரன் தன்னிடத்தில் நூறு வெள்ளிப் பணம் கடன் பட்டிருந்தவனாகிய தன் உடன் வேலைக்காரரில் ஒருவனைக் கண்டு, அவனைப் பிடித்து, அவன் பட்ட கடனைக் கொடுத்துத் தீர்க்குமளவும் அவனைக் காவலில் போடுவித்தான்.

அரசன் அந்த ஊழியக்காரன் தன் உடன் வேலையாளுக்கு மனதிரங்கவில்லை என்று அறிந்ததும் கோபமடைந்து, அவன் பட்ட கடனையெல்லாம் தனக்குக் கொடுத்துத் தீர்க்குமளவும் உபாதிக்கிறவர்களிடத்தில் அவனை ஒப்புக்கொடுத்தான். அன்புள்ள குழந்தைகளே, நம் தேவன் நம்மிடம் இப்படித்தான் நடந்துகொள்வார்.அவருடைய மன்னிப்பை நாம் கேட்கும் போது, மற்றவர்களின் தவறுகளை நாம் மன்னித்திருக்க வேண்டும். மத்தேயு 6:12ல் வாசிக்கிறோம் ‘எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும் என்று. நீங்கள் எப்படி நடத்தப்பட வேண்டும் என்று விரும்புகிறீர்களோ அப்படித்தான் மற்றவர்களையும் நாம் நடத்த வேண்டும்.

**God Bless**

**With love**
**Praisey akka**

கிறிஸ்து என்னும் மார்க்கம் பாடங்கள்

## நித்திய சுதந்தரம்

*சகோ. ஜே. ஆபகூக் ஜேம்ஸ் ராஜகுமார், சென்னை.*

**முன்னுரை :** தேவன் நமது சிருஷ்டிகர்.

**நமக்காக எல்லாவற்றையும் படைத்தவர்.**

நாம் அவருடைய பரலோக நித்தியமான சுதந்தரம் பெற்று அவரோடு வாழவேண்டும் என்று விரும்புகிறவர்.

1. பரிசுத்த வேதாகமம் தேவனானவரை விளக்கப்படுத்தும்படி தொடங்குகிறது. *ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்* (ஆதி 1:1). இருக்கிற எல்லாவற்றையும் தேவனானவர் சிருஷ்டித்தார் என்று ஆதியாகமம் கூறுகிறது. மனுஷர்களோ, இயந்திரங்களையும், கட்டடங்களையும் கட்ட தேவன் உண்டாக்கினவை களை எடுத்து பயன்படுத்துகிறார். ஏனென்றால், தேவனைப்போல மனிதர்களால் ஒன்றும் இல்லாமையிலிருந்து எதுவும் உண்டாக்க முடியாது.

2. வேதாகமம் தேவனுடைய தன்மையை வெளிப்படுத்துகிறது. அவர் அன்புள்ளவர். ஒரு ராஜா தன் மகனுக்கு ராஜ்யத்தையும் அதிகாரத்தையும் கொடுப்பதைப்போல தேவன் எல்லாவற்றையும் உண்டாக்கி, பூமியிலே படைத்த அவருடைய எல்லாவற்றையும் மனிதனுக்குக் கொடுத்து ஆண்டுகொள்ளும்படி பகிர்ந்து கொள்கிறார் (ஆதி 1:28). அப்பொழுது அவர் மனிதனை *மகிமையினாலும், கனத்தினாலும் அவனுக்கு முடிசூட்டி (அவருடைய) கரத்தின் கிரியைகளின் மேல் அவனை அதிகாரியாக வைத்து, சகலத்தையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர் என்று சொன்னான்* என்கிறது வேதம். இதினாலே தேவன் மனிதர் மேல் எவ்வளவு அன்பு வைத்தார் என்பது விளங்குகிறது. இந்த மிகப்பெரிய அன்பையும் ஆசீர்வாதத்தையும் உணராமல் ஆதாமும் ஏவாளும் தேவனுடைய வார்த்தையை மீறி பாவம் செய்தார்கள் (ஆதி 3:11). ஆகையால் கனத்தையும் மகிமையையும் இழந்து போனார்கள் (ரோமர் 3:23).

பூமிக்குரிய நன்மைகளைக் கொடுத்த தேவன், ஒரு நாளில் பரலோகத்தையுங்கூட நித்தியமாகப் பகிர்ந்துகொள்ளுவார் (எபி 11:16). தம்முடையதை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்வது அன்பின் செயலாய் இருக்கிறது! *தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறோம். தேவன் அன்பாகவே இருக்கிறார்...* (1 யோவான் 4:16). நீலவானங்கள், அதிகமான தண்ணீர்கள், பெரிய கண்டங்கள், அநேக நதிகள், நல்லமண் போன்றவைகளோடு தேவனானவர் பூமியை ஆயத்தம் செய்தார். அவர் அதை எப்படி செய்தார் என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

முதலாம் நாளில் அவர் வெளிச்சத்தை உண்டாக்கினார். இரண்டாம் நாளில் விண்கற்கள், வால் நட்சத்திரம், தீங்கு விளைவிக்கும் கதிர்கள் போன்றவற்றிலிருந்து பூமியைக் காக்கும்படி பூமிக்கு சுற்றிலும் வளிமண்டலத்தை உண்டாக்கினார். மூன்றாம் நாளில் அவர் பூமியில் வளர்கிற புல்லையும், பழத்தின் மரங்களையும், செடி கொடிகளையும் உண்டாக்கினார் [ஆதி 1 :6–11].

நான்காம் நாளில் அவர் சூரியனையும், சந்திரனையும், நட்சத்திரங்களையும் உண்டாக்கினார். அவருடைய பிரபஞ்சத்தில் 2 லட்சம் கோடி விண்மீன் மண்டலங்கள் உண்டு என்றும் ஒவ்வொரு விண்மீன் மண்டலத்தில் 1000 கோடி நட்சத்திரங்கள் உண்டென்றும் மனுஷர் மதிப்பிடுகிறார்கள். இவ்வளவு பெரிதான எண்ணிக்கை நம்மால் கற்பனை செய்ய முடியாது. [www.astronomy.com/science/astro-for-kids-how-many-stars-are-there-in-space] சூரியன், சந்திரன், நட்சத்திரங்களினால் நாம் பருவங்களையும், நாட்களையும், மாதங்களையும், வருஷங்களையும் குறிப்பிடுவதற்காகப் பயன்படுத்துகிறோம் [ஆதி 1:14–18].

ஐந்தாம் நாளில் அவர் மீன்களையும், கடல்வாழ் உயிரினங்களையும், பறவைகளையும் உண்டாக்கினார் [ஆதி 1:20]. ஆறாம் நாளில் அவர் நாட்டுமிருகங்களையும், ஊரும் பிராணிகளையும், காட்டு மிருகங்களையும் உண்டாக்கினார், கடைசியாக எல்லாம் ஆயத்தமாய் இருக்கையில் எல்லா உணவையும் சாப்பிடக் கூடிய உயிரினங்கள் போன்றவைகளோடு இயற்கை சமநிலை சரியாய் இருக்கையில் அவர் மனிதனை தம் சொந்த சாயலில் உண்டாக்கினார் [ஆதி 1:24–26].

தேவனானவர் ஆவியாய் இருக்கிறார் [யோவான் 4:24]. அவர் களிமண்ணிலிருந்து மனுஷனுடைய உடலை உண்டாக்கினாலும் அவர் உள்ளான மனிதனை ஒரு ஆவியாக உண்டாக்கினார். *இஸ்ரவேலைக் குறித்துக் கர்த்தர் சொன்ன வார்த்தையின் பாரம்; வானங்களை விரித்து , பூமியை அஸ்திபாரப்படுத்தி, மனுஷனுடைய ஆவியை அவனுக்குள் உண்டாக்குகிற கர்த்தர்* என்று சொல்லுகிறது வேதம் [சக. 12:1]. மேலும் *எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது* என்று உள்ளான மற்றும் புறம்பான மனிதன் என்று நம்மை இரண்டு மனிதர்களாக வகைபடுத்திக் காண்பிக்கிறது வேதம் [2கொரி 4:16].

இப்படியாக நாம் மனசு, இருதயம், பரமநம்பிக்கை, திட்டங்கள் போன்றவற்றை அடைந்தவர்களாய் இருக்கிறோம். அப்பொழுது அவர் தம் பெரிதான அன்பை வெளிப்படுத்தினார். எல்லாமும் அவருடையது என்றாலும் அவர் பூமியை மனிதர்களோடு பகிர்ந்துகொள்ளத் தெரிந்தெடுத்தார். *பின்பு தேவன் நமது சாயலாக நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக; அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருகஜீவன்களையும்,*

*பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார்* [ஆதி 1:26].

ஆதாமை சிருஷ்டித்த பிறகு, அவனுக்காக தேவனானவர் பழத்தின் மரங்களையும் மற்ற ஆகாரத்தோடு ஒரு தோட்டத்தையும் உண்டாக்கினார். இந்தத் தோட்டம் மனிதனுக்கு ஒரு தங்குமிடம் ஆனது. அந்தத் தோட்டத்தைப் பண்படுத்தி ஒழுங்காய் வைப்பது அவனுடைய வேலையாய் இருந்தது [ஆதி 2:8–15]. மனிதன் தனிமையாய் இருப்பது அவனுக்கு நல்லதல்ல என்று அறிந்து, ஆதாமினுடைய மனைவி ஆகும்படி தேவனானவர் ஒரு மனுஷியை உண்டாக்கினார் [ஆதி 2:18–24]. பாவம் உலகத்தில் பிரவேசிப்பதற்கு முன் தேவையான உணவைப் பறித்து சாப்பிடும் பூமிக்குரிய பரதீசில், ஏதேன் தோட்டத்தில் ஆதாமும், ஏவாளும் தங்கினார்கள். அங்கே எந்தவிதமான விரோதியும், வியாதியும், தீமையும் ஒன்றும் இருந்ததில்லை. தங்களுக்குள்ளும் தேவனோடும் அவர்கள் சமாதானமாக இருந்தார்கள். மாலையின் குளிர்ச்சியான நேரத்தில் தேவனானவர் அவர்களோடு நடந்த பேசுவார். தேவனைக் குறித்து இது வேதாகமத்தின் காட்சியாய் இருக்கிறது. இப்படி தேவனானவர் அன்பாயிருக்கிறார்!

3.இயேசு கிறிஸ்துவின் மூலமாக ஒரு பெரிய ராஜ்யத்தை உண்டாக்குவது தேவனுடைய நோக்கமாய் இருக்கிறது. அவரோடு பரலோகத்தில் வாழ அவரை நேசிப்பவர்களுக்கு ஆயத்தமும் பயிற்சியும் கொடுக்கும்படி அவர் இந்தப் பூமியை வலியோடுகூடிய பள்ளத்தாக்காய் பயன்படுத்துகிறார். *அன்றியும் நம்முடைய சரீரத்தின் தகப்பன்மார்கள் நம்மைச் சிட்சிக்கும்போது, அவர்களுக்கு நாம் அஞ்சி நடந்திருக்க, நாம் பிழைக்கத்தக்கதாக ஆவிகளின் பிதாவுக்கு வெகு அதிகமாய் அடங்கி நடக்கவேண்டுமல்லவா? அவர்கள் தங்களுக்கு நலமென்று தோன்றினபடி கொஞ்சக்காலம் சிட்சித்தார்கள்; இவரோ தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும் பொருட்டு நம்முடைய பிரயோஜனத்துக்காகவே நம்மைச் சிட்சிக்கிறார். எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும்; ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும்* [எபி 12:9–11].

நம்முடைய பூமிக்குரிய வாழ்க்கையில் நாம் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிவோமானால், தேவனானவர் நம்மை தமது ராஜ்யத்தில் உட்படுத்தி, பரலோகத்தின் குடிமக்களாக்கி, தம்முடைய சத்தியத்தையும், இரக்கத்தையும், நீதியையும், அன்பையும் கற்றுக்கொள்ள அவர் நமக்கு உதவிசெய்வார் [கொலோ 1:13]. நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் மூலமாக அவருக்குள் இந்த நித்திய திட்டத்தை பரலோகத்தின் தேவன் வடிவமைத்தார். பல வேதவசனங்கள் இந்த நித்திய திட்டத்தை விவரிக்கிறது.

ஏனென்றால் தமக்காகவும் தம்மாலேயும் சகலத்தையும் உண்டாக்கினார், அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டுவந்து

சேர்க்கையில் அவர்களுடைய இரட்சிப்பின் அதிபதியை உபத்திர வங்களினாலே பூரணப்படுத்துகிறது அவருக்கேற்றதாயிருந்தது'' (எபி.2:10).

நம்முடைய கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார். தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களுக்கு குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத் தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்துகொண்டபடியே, பிரியமானவருக்குள் நாம் நமக்குத் தந்தருளின தம்முடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாக, தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மை இயேசுக் கிறிஸ்து மூலமாய்த் தமக்குச் சுவிகார புத்திரராகும்படி முன் குறித்திருக்கிறார் (எபே 1:3-6).

தேவனுடைய திட்டம் கிறிஸ்துவுக்குள் நடக்கிறது என்பதை நாம் கவனிக்கவேண்டும். நாம் கிறிஸ்துவுக்கு வெளியே இருக்கும்போது, இந்த நித்திய திட்டத்தில் நமக்கு பங்கு இருக்கவில்லை; நாம் கிறிஸ்துவுக்குள் பிரவேசித்தால், உலக தோற்றத்திற்கு முன் தேவன் முன்குறித்த திட்டத்திற்குள் கூட நாம் பிரவேசிக்கிறோம்.

அன்றியும் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம். தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேரானவராயிருக்கும் பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன் குறித்திருக்கிறார் (ரோமர் 8:28-29).

4. தேவனோடு நித்திய சுதந்தரத்தில் வாழ்வதற்கு பூமிக்குரிய வாழ்க்கையின் மூலம் ஒரு பெரிய குடும்பத்தை (வீட்டை) ஆயத்தம்செய்ய அவருடைய நோக்கமாய் இருக்கிறது. அதுவே அவருடைய சபையாய் இருக்கிறது, *தாமதிப்பேனாகில், தேவனுடைய வீட்டிலே நடக்க வேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன்; அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய்ச் சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது*, 1தீமோ. 3 : 15. ஆனாலும், அவருடைய பொக்கிஷங்களையும் பரலோக ராஜ்யத்தையும் சுதந்தரித்துக்கொள்ள நம்பத்தக்க பிள்ளைகள் அவருக்குத் தேவை. ஏனென்றால் நம்பிக்கை இல்லாதவர்களிடத்தில் எந்த ஒரு பொறுப்பையும், நன்மைகளையும் யாரும் கொடுக்கமாட்டார்கள். ஆனால் தேவன், நாம் பரம நித்திய சுதந்தரத்தைப் பெறுவதற்குத் தேவையான அனைத்தையும் அவருடைய வல்லமையினால் நமக்குக் கொடுத்திருக்கிறார், தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற

அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி, இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது, 2பேது. 1 : 3 – 4.

அவருடைய நம்பத்தக்க பிள்ளைகளில் நாம் ஒருவராய் இருக்கவேண்டும். அப்படி இல்லையென்றால் நியாயத்தீர்ப்பின் நாளில் நாம் அவிசுவாசிகளாக எண்ணப்பட்டு, நித்திய தண்டனையைப் பெறுகிறவர்களாய் இருப்போம். தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும். அந்நாளிலே தம்முடைய பரிசுத்தவான்களில் மகிமைப்படத்தக்கவராயும், நீங்கள் எங்களுடைய (அப்போஸ்தலர்களுடைய) சாட்சியை விசுவாசித்தபடியினாலே உங்களிடத்திலும், விசுவாசிக்கிறவர்களெல்லா ரிடத்திலும் ஆச்சரியப்படத்தக்கவராயும், அவர் வரும்போது,அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமை பொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாக்கி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள் என்று பரிசுத்த ஆவியானவர் எச்சரிக்கிறார், 2தெச. 1 : 7 – 10.

பரலோகத்தின் தேவன் தாமே ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உங்களை வழிநடத்தி ஆசீர்வதித்து, அவருடைய பரலோக நித்திய சுதந்தரத்தில் பங்கடையச் செய்வாராக! ஆமென்.

✝

---

## பேதுருவின் நிருபங்களில் உள்ள விலைமதிப்பற்ற விஷயங்கள்

1. விலைமதிப்பற்ற இரத்தம் (1 பேதுரு 1:19) -மீட்க
2. விலைமதிப்பற்ற விசுவாசம் (1 பேதுரு 1:7) - முயற்சி செய்ய
3. விலையுயர்ந்த கல் (1 பேதுரு 2:4) -ஆதரிக்க
4. விலையேறப்பெற்ற கிறிஸ்து (1 பேதுரு 2:7) - அன்பு செய்ய
5. விலைமதிப்பற்ற வாக்குறுதிகள் (2 பேதுரு 1:4) - மன்றாடுவதற்கு

# தேவன் அருளிய சொல்லிமுடியாத ஈவு

*சகோ.* பாண்டியன்

**ஆ**ண்டவர் இயேசுவின் நாமத்தில் உங்களுக்கு வாழ்த்துதலும், சமாதானமும் உண்டாவதாக. எருசலேமில் சபை ஆரம்பிக்கப்பட்ட போது தேவனுடைய ஜனங்களே அதாவது ஆலோசனை சங்கம், மூப்பர் போன்ற யூத ஜனங்களே எதிராக செயல்பட்டார்கள் சபை மக்கள் மற்றவர்களைப் போலக் கொள்வினைக், கொடுப்பினை செய்து சாதாரணமாக வாழமுடியாத சூழ்நிலை இருந்தது. ஆகவே, ஆரம்பத்தில் தங்கள் சொத்துக்களை விற்று அப்போஸ்தலர் மூலமாக பகிர்ந்து கொண்ட சபையார்; பொருளாதாரம் குறைவுபட்ட போது புறஜாதி மத்தியில் ஊழியம் செய்த பவுல் அப்போஸ்தலன் மூலமாக மற்ற சபையாரின் தர்ம சகாயத்தை நாடினார்கள் (கலாத் 2:9,10)

இப்படியாகக் கொரிந்து சபையிலிருந்து பெற்றுக்கொண்ட உதவிக்காக நன்றி சொல்லும் விதமாக பவுல் குறிப்பிடும் போது தேவன் *அருளிய சொல்லிமுடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்* என்கிறார் (2 கொரி 9:15) காரணம் இவர்கள் செய்த உதவியானது அநேகப் பரிசுத்தவான்களின் குறைவுகளை நீக்கியது. தேவனுடைய வாக்குத்தத்தப்படி துவங்கப்பட்ட சபை வளர்ச்சிக்கு சபையாரின் காணிக்கை பயன்பட்டது, அது இந்த கால கட்டத்தில் பிராந்திய சபைகள் நிர்வாகத்திற்கும், சபை ஊழியரின் உதவிக்கும் சபையாரின் காணிக்கைகளே ஆதாரமாக இருக்கிறது. இது தேவதிட்டமாகிய அப்போஸ்தல உபதேசப்படியான சட்டமாகும். உற்சாகமாகக் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார் (2கொரி 9:7).

ஈவு என்பதற்கு பதில் செய்ய முடியாத, உதவி எதிர்பாராமல் கிடைக்கும் தயவு அல்லது நன்மை என்று அர்த்தம் கொள்ளலாம். இதில் முதலாவது நாம் பெற்றுக்கொண்ட *இரட்சிப்பு* என்பது ஒரு முக்கியமான தேவனுடைய ஈவு ஆகும் (எபே 2 : 5-10) பாவத்தில் மரித்தவர்களாய் இருந்த நம்மை கிறிஸ்துவுடனே உயிர்ப்பித்து; தேவசமூகத்தில் அவரோடே கூட நம்மை உட்கார வைப்பது என்பது எவ்வளவு பெரிய சிலாக்கியம் அல்லவா? அது நம் சுய பெலத்தால் அல்ல முற்றிலும் தேவனுடைய ஈவு என்றார் பவுல். மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப் படுத்திக் கொண்டாலும் தன் ஜீவனை நஷ்டப் படுத்தினால் அவனுக்கு ஒரு லாபமும் இல்லை என்றார் நமதாண்டவர். ஆகவே, நாம் இரட்சிக்கப்பட்டு சபையில் இருப்பது

அடுத்ததாக, தேவனுடைய ஜீவனுக்கு அந்நியராக இருந்த நமக்கு அவரோடே உறவாடும்படியாகக் கிடைத்த நீதியாகிய ஈவு ஆகும். (ரோமர் 5:17) தேவ வார்த்தைகளைக் கேள்விபட்டு, விசுவாசமுள்ள வனாகி ஞானஸ்நானம் பெற்ற நாம் இரட்சிக்கப்பட்டோம். அந்த விசுவாசத்தினால் நாம் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம். மேலும், இயேசுவினுடைய இரத்தத்தினால் நாம் நீதிமான்காளாக்கப்பட்டு இருக்கிறோம் (ரோமர்.5:1,9) இது இயேசுக்கிறிஸ்து என்னும் ஒருவராலே பெற்றுக்கொண்ட நீதியாகிய ஈவு ஆக இருக்கிறது. நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்.

மூன்றாவதாக, பாவத்திற்கு விலகி வாழும் நன்மையான ஈவு (யாக் 3. 27) யாக்கோபு அதைப் பற்றி எழுதும் போது, மனுஷன் தன் சுய இச்சையினால் சோதிக்கப்பட்டு பாவத்தில் விழுகிறான். எனவே, அதற்கு தேவனைக் காரணம் சொல்லக்கூடாது எனக் குறிப்பிடுகிறார். பாவம் பூரணமாகும்போது அவன் தேவனை விட்டுப் பிரியும் மரணம் அவனைச் சந்திக்கிறது. (யாக் 1:13-15) இப்படிப் பாவம் சூழ்ந்த உலகில் பாவத்திற்கு விலகி வாழும் கிறிஸ்தவ வாழ்க்கை நமக்குச் சத்திய வசனத்தினால் பிறக்கும் போது கிடைக்கிறது. இஸ்ரவேலர், புறஜாதியார் என்ற யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலும் இல்லை; இதுதான் பரத்திலிருந்து இறங்கி வருகிற நன்மையான ஈவு ஆக இருக்கிறது.

நான்காவது, நீதிமொழிகள் 19:14ல் புத்தியுள்ள மனைவியோ கர்த்தர் அருளும் ஈ.வு என்று பார்க்கிறோம். இங்கு மனைவி என்று ஒரு உறவைக் குறிப்பிட்டாலும் குடும்ப ஒற்றுமைக்குப் பிற உறவுகளோடு சம்மந்தப்பட்டவளாக ஸ்திரீயானவள் இருக்கிறாள். விசேஷமாக பிள்ளைகளை நல்லொழுக்கத்தில் வளர்க்கும் மிக முக்கிய பொறுப்பான ஊழியத்தை தேவன் அவர்களிடம் கொடுத்திருக்கிறார். நாம் வாழும் சமுதாயத்தில் ஓரளவுக்காவது நல்லொழுக்கம் இருக்கிறது என்றால் அது தேவன் அருளிய- இப்படிப்பட்ட புத்தியுள்ள ஸ்திரீகளால் தான் என்றால் அது மிகையாகாது. அதனால்தான் புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள் என்கிறது வேதம்.

நிறைவாக, பரம ஈவு என்பதைப் பற்றிப் பார்க்கலம். ( எபி 6:4-6) சபை என்பது பரலோக ராஜ்ஜியத்திற்கு அடையாளமாக இருக்கிறது. தேவ சமூகம் மகிமையாக சபையில் இருப்பதால் தான் நாம் பூமியில் இருந்தே பரலோக தேவனைத் தொழுது கொள்ள முடிகிறது. சபை மக்களோடே நாம் உறவு கொள்ளும் நம் ஐக்கியமானது, ஆண்டவர் இயேசுவுடனான நெருக்கமான உறவுக்கு சமமாக உள்ளது.

(கொரி 10:16) இதைத்தான் பரம ஈவை ருசி பார்ப்பது என்று எபிரெய ஆசிரியர் குறிப்பிடுகிறார். தேவனுடைய பிள்ளைகளாக இருக்கும் பெரிய சிலாக்கியத்தை சிலர் அசட்டை பண்ணி கண்களின் இச்சை, மாம்சத்தின் இச்சை, ஜீவனத்தின் பெருமை ஆகிய உலகக் காரியங்களில் ஈர்க்கப்பட்டு தேவன் அருளும் சொல்லி முடியாத ஈவுகளை இழந்து போகிறார்கள்.

சத்தியத்தை அறியும் அறிவை அடைந்த ஒருவர் சபைக் கூடிவராமல் போனால் தேவனுடையக் குமாரனை நாமே மறுபடி சிலுவையில் அறையும் கொடூரத்தை அவர்கள் செய்கிறார். சபையைக் கூடிவரும் போது நாம் மற்றவர் குறைகளை கவனியாமல், அவர்களுடைய அன்பையும், நற்கிரியைகளையும் கவனிக்க வேண்டும். (எபி 10:24–27) சபைப் பரிசுத்தவான்கள் இவைகளைக் கருத்தில் கொண்டு மற்றவர்களுக்கு புத்தி சொல்லக் கடமைப் பட்டுள்ளோம். அப்படியாக தேவன் நம்மை ராஜ்ஜியத்தில் பெலப்படுத்தி அவருடைய ராஜ்ஜியத்தில் தொடர்ந்து பயன்படுத்துவாராக. அவருக்கே சதா காலமும் மகிமை உண்டாவதாக, ஆமென். ✝

---

## சபைகள் ஏன் மந்தமாகி விடுகிறது?

- விசுவாச குறைபாடு – ரோமர் 1:17
- உலகப்பிரகாரமாக ஆகிவிடுகிறது– 1 யோவான் 2:15
- குளிருமில்லாமல் அனலுமில்லாமல் வெதுவெதுப்பாக மந்தமாக இருக்கிறது – வெ. விசேஷம் 3: 15–16
- சபை ஒழுங்கை கடைபிடிப்பதில்லை – 1 கொரிந்தியர் 5
- கொடுக்க மறுப்பது – 1 கொரிந்தியர் 16:2
- ஜெபமின்மை ஜெப குறைச்சல் – ரோமர் 3:11
- ஆயினும் கர்த்தரின் சபை விழுந்து போகாது – மத்தேயு16:18

## அவன் மேல் என்
## ஆத்துமா பிரியமாயிராது !

Bro. K.M. பிலிப்

பிரியமானவர்களே! உங்கள் ஆத்தும இரட்சிப்பு ஈடேற பிரயாசப்பட்டுக் கொண்டிருக்கிற (எபி.10:39) யாவருக்கும் ஆத்ம நேசர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாகிய இயேசுவை நோக்கி நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓட தேவன் தாமே உதவி செய்வாராக (எபி.12:1).

இக்கட்டுரையின் வாயிலாக தேவன், பின்வாங்கிப் போவானானால் அவன் மேல் என் ஆத்துமா பிரியமாயிராது (எபி.10:38) என்று இம்மட்டும் சபையில் நிலைநிற்கும் விசுவாசிகளை எச்சரிக்கிறார். இதில் ஏற்கனவே சபையை விட்டுப் பின்வாங்கிப் போன அவிசுவாசிகளும் கூட எச்சரிப்பைப் பெற்று மனந்திரும்பி தேவனுடைய பிரியத்தைப் பெற்றுக்கொள்ள தேவன் வாய்ப்புத் தருகிறார். தேவ எச்சரிப்பு, எப்படி, யார்மூலம் கிடைத்தாலும் நாம் விழித்துக் கொள்ள வேண்டும். ‘‘விசுவாசத்தினாலே நோவா.... தேவ எச்சரிப்பைப் பெற்று பயபக்தி உள்ளவனாகி (எபி.11:7) ‘தேவன் தனக்கு கட்டளையிட்ட படியெல்லாம் செய்து (ஆதி. 6:23) தன்னை மட்டுமில்லாமல் தன் குடும்பத்தையே இரட்சித்துக் கொண்டான். யோனா மூலம் எச்சரிப்பைப் பெற்ற நினிவே பட்டணத்து ராஜா முதல் மக்கள் அனைவரும் தங்களைத் தாழ்த்தி, தங்கள் பொல்லாத வழிகளை விட்டு மனந்திரும்பி தேவ இரக்கத்தையும், பிரியத்தையும் பெற்றதால் பட்டணம் அழிக்கப்படாமல் காக்கப்பட்டது (யோனா:3). ஆம், ஜாக்கிரதை உள்ளவர்களுடைய ஆத்துமாவோ புஷ்டியாகும் (நீதி.13:4).

எனவே, தேவ எச்சரிப்பை பயபக்தியோடு உற்று நோக்குவோம். இதில் இரண்டு எச்சரிக்கைகளை தேவன் கொடுக்கிறார்.

1. விசுவாசி பின்வாங்கக் கூடாது.
2. விசுவாசி தேவனுடைய பிரியத்தை இழந்துவிடக் கூடாது.

இதில் இரண்டாவது எச்சரிப்பை முதலாவது கவனிப்போம்.

### I. விசுவாசிகள் தேவனுடைய பிரியத்தை இழந்துவிடக் கூடாது.

தேவன் ஆதிமுதல் இன்று வரை மனித இனத்தின் மீது பிரியமுள்ளவராகவே இருக்கிறார். உலகைப் படைத்த தேவன் எல்லாவற்றையும் படைத்த பிறகே மனிதனைப் படைத்த காரணத்தை உற்றுக் கவனித்தால், மனிதன் கண் விழிக்கும்போது அவனுக்கு முன் எல்லாம் நல்லவைகளாக, திருப்தியாக, குறைவின்றி இருக்க வேண்டும். அவன் எப்பொழுதும் மகிழ்ச்சியாய் வாழ வேண்டும். தன்னோடு உறவாடிக் கொண்டிருக்க வேண்டும் என்ற தேவ அன்பும் பிரியமும்

தெளிவாய் வெளிப்படும். ஆனால், தேவனுடைய பிரியத்தைச் சீர்குலைக்க எதிராளியான பிசாசானவன் ஆதாம் ஏவாளை வகைதேடிச் சுற்றி சுற்றி வந்தான். ஏவாளின் தனிமையை தனக்குச் சாதகமாக்கி வஞ்சக வலையை விரித்தான். சிக்கிக்கொண்ட இருவரும் விழுந்து போனார்கள்; சாபத்திற்கு உள்ளானார்கள்; ஏதேனின் செழிப்பான, பயமற்ற திருப்தியான வாழ்க்கையை இழந்து போனார்கள். தேவ பிரியத்தையும் இழந்து, தேவனை விட்டே பிரிக்கப்பட்டார்கள். ஆனாலும் மனிதன் மீது மாறாத பிரியமுள்ள தேவன் மீண்டும் அவனைத் தன்னோடு இணைத்துக்கொள்ள தன் குமாரன் கிறிஸ்துவையே நம் பாவங்களை நிவர்த்தி செய்யும் கிருபாதார பலியாக ஒப்புக் கொடுத்தார். (யோவான் 4:16). இந்த தியாகத்தின் வழியாக மீண்டும் நம்மை அவருடைய பிள்ளைகளாக அணைத்துக் கொண்டார். (யோவான் 1:12). மறுபடியும் நாம் பின்வாங்கிப் போகாதபடி தன் குமாரனின் சுய ரத்தத்தினால் சம்பாதித்த சபைக்குள் அடைக்கலப்படுத்தி கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருக்கும் வாய்ப்பையும் கொடுத்திருக்கிறார். இம்மையில் மட்டுமில்லாமல் மறுமையிலும் தேவனோடு நித்திய மகிழ்ச்சியாய் வாழ நம்மை அழைத்துச் செல்ல ஏற்ற வேளையில் தன் குமாரனையே மீண்டும் அனுப்பப்போகிறார் (தெச. 4:16,17).

அன்பானவர்களே, மனித இனத்தின்மீது தேவன் வைத்திருக்கிற மாபெரும் பிரியத்தை இழப்பதென்பது எவ்வளவு மதியீனம் என்று சற்று நின்று நிதானித்துப் பாருங்கள். நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து கொண்டு (எபே.4:1) பிசாசுக்கு இடம் கொடாமலும் இருந்து (5:27) பின்னிட்டுப் பாராமல் தேவனுடைய பிரியத்தால் வரும் ஆசீர்வாதத்தைப் பெற்று மகிழுங்கள். ஆகவேதான், பிரியமானவர்களே! உன் ஆத்துமா வாழ்வதுபோல் நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிரு என்று தேவன் உங்களை வாழ்த்துகிறார் (யோவான் 3:2) கிறிஸ்துவுக்குள் வாழ்ந்து சுகித்திருங்கள்.

## II. இப்பொழுது முதல் எச்சரிக்கையை கவனிப்போம் விசுவாசி பின் வாங்கக் கூடாது

அதாவது ஒரு விசுவாசி தன்விசுவாசத்தை விட்டு மறுதலிக்கவோ விழுந்து போகவோ கூடாது. நல்ல ஆரோக்கியமாயிருந்த ஒருவரது உடலில் பெலவீனம் ஏற்படுகிறதென்றால், ஆரம்ப நிலையிலேயே தகுதி வாய்ந்த மருத்துவரைச் சந்தித்து பரிசோதித்து மருத்துவர் தரும் ஆலோசனையின்படி சிகிச்சை பெற்று அதிகக் கேடு வருமுன் நல்ல ஆரோக்கியத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அப்படியே சகோதரரே ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்குள்ளும் இராதபடிக்கு எச்சரிக்கையாய் இருங்கள். (எபி:3:12). அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதற்கேதுவான வாக்குத்தத்தம் நமக்குண்டாயிருக்க உங்களில் ஒருவனும் அதை அடையாமல் பின்வாங்கிப் போனவனாகக்

காணப்படாதபடிக்கு பயந்திருக்கக்கடவோம் (எபி:4:1). எனவே, பின்வாங்கிப் போவதற்கான காரண காரியங்களைக் கவனமாய் ஆராய்ந்து பார்ப்போம்.

**அ: ஒரு காரணம் பின்னானவைகளை மறந்து விடு** (பிலி.3:13)

சோதோம் கொமோராவின் பாவம் மிகவும் கொடியதாயிருந்ததால் அதை அக்கினியால் அழிக்க தேவன் முடிவெடுத்தார். ஆனாலும், அங்கே நீதிமானாய் வாழ்ந்த லோத்துவைத் தப்புவிக்க தேவன் தேவதூதர்களை அனுப்பி லோத்தையும் அவன் மனைவி, பிள்ளைகளையும் பட்டணத்துக்கு வெளியே இழுத்து வந்து உன் ஜீவன் தப்ப ஓடிப்போ பின்னிட்டுப் பாராதே என்ற கட்டளையைக் கொடுத்தார். அக்கினி, சோதோம் கொமோராவை அழித்த போதோ, லோத்துவின் மனைவி பின்னிட்டுப் பார்த்து உப்புத்தூண் ஆனாள் என்ற ஒரு பரிதாபமான சரித்திரத்தை ஆதி:19:1 –26–ல் பார்க்கிறோம். லோத்தின் மனைவி வாய்ப்புக் கிடைத்தும் எச்சரிக்கை உணர்வு இல்லாததால் பின்னோக்கிப் பார்த்து வாழ்க்கையை இழந்து போனாள்.

தேவ பிள்ளையே நம்மை, பின்னோக்கி இழுக்கும் உலக இச்சை, மாம்ச இச்சை போன்ற பின்னானவைகளை மறந்து வாழ்வளிக்கும் தேவ கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நம்மை ஒப்புக் கொடுப்போம். பின்னானவைகளை மறந்து முன்னோக்கிச் செல்வோம்.

மோசே மூலம் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்ட இஸ்ரவேலர்கள் தேவனின் அற்புதமான நிறைவான வழிநடத்துதலை எல்லாம் மறந்து அவ்வப்பொழுது எகிப்தின் பின்னானவைகளை மறக்காமல் தங்கள் எண்ணத்தில் மிதக்க விட்டதால் (யாத்.14:11,12(16:13) காலேப், யோசுவா தவிர 6லட்சம் புருஷர்களும் வனாந்திரத்திலேயே மரித்துக் கானானை இழந்துபோனார்கள். அன்பானவர்களே, உங்கள் விசுவாச வாழ்க்கைக்கு முன் இருந்த பாரமான பாவமான யாவற்றையும் பின்னுக்குத் தள்ளிவிட்டு (எபி.12:1) முன்னானவைகளை நாடி கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தையப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருங்கள் (பிலி. 3:14)

**ஆ. நீங்கள் சும்மா இருந்தால் இடறி பின்வாங்கிப் போவீர்கள்**

தேவனுடைய பிள்ளைகள் தேவன் நமக்குக் கொடுத்த பொறுப்புகளை நிறைவேற்றுவதில் எப்பொழுதும் கவனமுள்ளவர்களாய் இருக்க வேண்டும். ஏனெனில், சோம்பேறியினுடைய ஆத்துமா விரும்பியும் ஒன்றும் பெறாது (நீதி.13:4). தாவீதின் வாழ்க்கையில் மிகப்பெரிய கரும்புள்ளியை ஏற்படுத்திய வரலாற்றை சாமு :11–ஆம் அதிகாரத்தில் காண்கிறோம். பின்னுக்குத் தள்ளி மறந்து விட்ட பாவமான கண்களின் இச்சைக்கு இடம் கொடுத்து, பொய், வஞ்சனை, சுதந்திரம் கடைசியில் கொலை என்கிற அளவில் தாவீதை படுகுழிக்குள் தள்ளியது

சோம்பல்தான். இராஜாக்கள் யுத்தத்திற்கு புறப்படும் காலம் வந்தபோது..... யோவாபையும் சேனைகளையும் போருக்கு அனுப்பிவிட்டு தாவீதோ எருசலேமில் இருந்து விட்டான். படுக்கையில் விழுந்து கிடந்தான். [II சாமு 11:2]. சோம்பலுக்கு இடம் கொடுத்து தன் பொறுப்பை தட்டிக் கழித்ததால் தாவீது தேவ கோபத்திற்கு ஆளானான். சோம்பேறியின் வயல் முள்ளுக்காடாய் இருந்தது என்றே [நீதி.24:10,11] ஞானியின் வார்த்தை எவ்வளவு சரியாய் இருக்கிறது என்பதை உணர்ந்து பாருங்கள். பரிசுத்த வாழ்க்கையில் நாம் உற்சாகமாய் தொடர்ந்து முன்னோக்கிச் செல்ல செய்ய வேண்டிய நல்ல காரியங்களை [ பேதுரு 1:5-10] பகுதியை தயவு செய்து வாசித்து விசுவாசித்து செயல்படுங்கள். உங்களைப் பின்வாங்கிப் போகச் செய்கின்ற சோம்பலுக்கு ஒரு போதும் இடம் கொடுக்காதீர்கள்.

### இ. பின்வாங்கிப் போவதற்கான மற்றொரு காரணம் – பயம்

வா என்று அழைத்தவுடன் எல்லாவற்றையும் விட்டு தைரியமாய் இயேசுவை பின் தொடர்ந்தவன் தான் பேதுரு [மத். 5:19] வா என்று இயேசுவிடமிருந்து கட்டளை கிடைத்தவுடன் விசுவாசத்தோடு சிறிதும் பயமின்றி உடனே படகைவிட்டு இறங்கிய பேதுரு, கடல் நீரின் மேல் நடந்தார். இவர் கடலில் நடக்கும் முன்பிருந்தே எதிர் காற்றும், புயலும், கொந்தளிக்கும் அலைகளும் இருந்து கொண்டேதான் இருந்தது. பேதுருவில் அவைகளின் மத்தியிலும் நீரின் மேல் நடக்க முடிந்தது. ஆனால், பேதுரு இயேசுவை மட்டும் நோக்கிப் பார்ப்பதை விட்டு தன் பார்வையைச் சற்று சூழ்நிலைக்குத் திருப்பியதால் பயம் கவ்விக் கொண்டது. ''பயம்'' அவரைக் கடலில் ஆழ்த்தியது. இன்னும் விசுவாசிகள் ஞானஸ்நானம் எடுத்த ஆரம்ப நிலையில் சபை கூடிவரும் வேகம், பாடல், வேதவாசிப்பு ஜெபம் ஆகியவற்றில் காட்டும் ஆர்வம் காணிக்கை கொடுப்பதிலுள்ள உற்சாகம் அவர்களது விசுவாச வாழ்க்கை குறித்து ஆச்சரியப்பட வைக்கும். ஆம் நீரின் மேல் நடப்பார்கள். காலப்போக்கில் சபையைப் பார்ப்பதை விட்டுச் சற்றுச் சூழலையே எப்பொழுதும் பார்த்து, பயந்து பின்வாங்கி காணாமல் போய்விடுவார்கள். அவர்களுடைய நிலையை [வெளி.21:8]-ல் பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும்...... இரண்டாம் மரணமாகிய அக்னியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்பதை ஆவியானவர் தெளிவாய் வெளிப்படுத்தியுள்ளார்.

அதே சமயம் தாங்கள் ஆராதிக்கிற தேவனைக் குறித்த அசைக்க முடியாத விசுவாசம் இருந்ததால், பயமின்றி இராஜாவுக்கு எதிராக சவால் விட்ட விசுவாசிகள் தான், சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகா என்ற வாலிபர்கள் [தானி.3:16] இந்த காரியத்தைக் குறித்து உமக்கு உத்தரவு சொல்ல எங்களுக்கு அவசியமில்லை என்றார்கள். விசுவாசிகளாகிய இவர்களது பயமற்ற வாழ்க்கையைப் பாருங்கள். தேவன் அவர்களை அக்கினிக்கும், இராஜாவின் கைக்கும் தப்புவித்தார் என்பதே சரித்திரம்.

**ஈ. பின்வாங்கிப் போவதற்கான காரணங்களில் ஒன்று திருப்தியற்ற நிலை**

ஆதாம் ஏவாளை தேவன் மனிதர்களாய் இருப்பதற்காகவே படைத்தார். தேவையான சகலமும் கொடுத்தார். தேவன் கொடுத்த வாழ்க்கையில் திருப்தியடையாத அவர்கள், தாங்கள் தேவர்கள் ஆக வேண்டும் என்ற தேவையற்ற முடியாத ஒன்றின் மேல் தங்கள் இருதயத்தைச் சாய்த்ததால் கிடைத்த திருப்தியான வாழ்க்கையையும் இழந்து போனார்கள் (ஆதி. 1,2) தன் இனப்பெருமை பட்டம் படிப்பு பதவி எல்லாவற்றையும் குப்பை என்று தள்ளிவிட்டு விசுவாச வாழ்க்கை போதுமென்று வந்த மாபெரும் விசுவாசியின் திருப்தியான வாழ்க்கையை உங்கள் இருதயத்தைத் திறந்து ஆழ்ந்து கவனியுங்கள். தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும்; வாழ்ந்திருக்கவும் தெரியும். எவ்விடத்திலும் எல்லாவற்றிலும் திருப்தியாய் இருக்கவும் நான் போதிக்கப்பட்டிருக்கிறேன். ஏனெனில், நான் எந்த நிலைமையில் இருந்தாலும் மன இரம்மியமாய் இருக்கக் கற்றுக் கொண்டேன்(4:1). என்றதோடு போதுமென்கிற மனதோடு கூடிய தேவ பக்தியே மிகுந்த ஆதாயம் (1தீமோ6:6) என்று மனதிருப்தியாய் வாழ்ந்த அனுபவ விசுவாசி பவுல் கூறுகிறார்.

தேவனுக்குப் பிரியமான விசுவாசிகளே பின்வாங்கிப் போகும் எண்ணத்தை அறவே அழித்துப் போடுங்கள். வழுவாதபடி உங்களைக் காக்கவும் தமது மகிமையுள்ள சன்னிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ளவரும் உங்கள் மேல் பிரியமுள்ளவருமான தேவன் தாமே வழிநடத்துவாராக...... (யூதா:26) ஆமென்.

✝

---

**தூரம்** இருந்தாலும்
**நேரம்** தவறாமல் ஆலயம் **செல்லுங்கள்**

**பாரம்** இருந்தாலும்
**வாரம்** தவறாமல் ஆண்டவரிம் **சொல்லுங்கள்**


**வேலை** இருந்தாலும்
**வேளை** தவறாமல் ஆண்டவரை **நினையுங்கள்**


**விசனம்** இருந்தாலும்
**வசனம்** தவறாமல் தியானத்துடன் **படியுங்கள்**

**பாடுகள்** இருந்தாலும்
**பாடல்கள்** தவறாமல் துதியுடன் **பாடுங்கள்**

**விசேஷம்** இருந்தாலும்
**சுவிசேஷம்** தவறாமல் பிறருக்கு **அறிவியுங்கள்**


## 12 வித்தியாசமான தலைப்புகளில் கைப்பிரதிகள் கிடைக்கும். தேவைக்கு எங்களைத் தொடர்பு கொள்ளவும்.

















# World Evangelism Gospel Media

Rajanayagam & Benny Martin On Tamilan TV
Every Saturday 7:00 - 7:30 am

Rajanayagam & Benny Martin On Nambikkai TV
Every Friday 7:30 - 8.00 am

Arjunan on Nambikkai TV
TV : On Monday & Saturday 7.30 - 7.45 pm

Hindi TV Program : Sunny, Francis & Vinay David Speaking
Sunday & Tuesday ( 7:00 - 7:30 ) pm on
Shubhasandesh Hindi Channel

P.K. Varghese In Malayalam :
Every Saturday 6:00 - 6:30 am on Jai Hind Channel TV

Philemon & Kingsley on Tamilan TV and Nambikai TV :
Every Sunday 6:45 - 7:00 am
Every Friday 6.00 - 6.30 am
Joy TV - Saturdays 9.00 pm Salvation TV - Every Sunday 2.00 pm

Joshua & Ricky Gootam In Telugu:
Every Saturday at 6:00 pm Subhavartha Channel
Every Wednesday at 6:30 pm on Rakshana Channel
Every Thursday at 11:00 am on Rakshana Channel
Satyavani T.V. online : www.sakthitv.in
Every Wednesday & Friday at 8.00 pm

For English Voice of Truth
Contact - Brothers Philemon or Kingsley
@ Po box 15 , 45/c1 Church Lane, Coronation Street,
Arasaradi, Madurai - 625016
9244204420 / 21, 0452 - 2607026



**"Registered" with RNI No: TNTAM/2006/20446**
Postal regn. No. Erode/26/2021 - 2023
**Licensed to Post without pre payment**
**No: TN / WR / ERD / 03 / WPP / 2021 - 2023**
Published on 17/18 th of Every Month
Posted at Erode HPO on 20/21 of Every Month.

# எங்களது இதர வெளியீடுகள்


**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
– ஆசிரியர்

**தபால் செலவிற்கு**
**பணம் அனுப்பி**
**இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.**
























## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில்
## ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**
ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு 7 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.
விருப்பமுள்ளவர்கள்
மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குனர்

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

த.பெ.எண் 27, காங்கேயம் 638–701.
தமிழ்நாடு , இந்தியா.

To:

## திருமறை தியானம்

**நம்பிக்கை** தொலைக்காட்சியில்

| | |
|---|---|
| செவ்வாய் | காலை 6:30 – 7:00 மணி |
| வெள்ளி | காலை 6:30 – 7:00 மணி |

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.